திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



ஸ்ரீ பஞ்சமுக விநாயகர்
திருவொற்றியூர்

மாலை 7] குரோதி புரட்டாசி—அக்டோபர் 1964 [மணி 1

சென்னை அரசாங்க அறநிலையப்



சென்னை மாநில கவர்னர் திரு. ஜெயசாம ராஜ உடையார் அவர்கள், திருத்தணிகை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு வருகை புரிதல். (9-8-1964)

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 7] குரோதி புரட்டாசி—அக். 1964 [மணி 1

விநாயகர் மாட்சி

முன்னுரை :

நம் இந்திய நாட்டிலும் - இந்து மதத்திலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் தெய்வங்களுள், விநாயகரும் ஒருவர் ஆவர். விநாயகர் கோயில் இல்லாத ஊர் ஒன்றுகூட, நம் தமிழ் நாட்டில் இருத்தல் அரிது. பட்டி தொட்டிகள் ஆகிய எல்லா ஊர்களிலும், மூலை முடுக்கர்களிலும், சாலை சந்திகளிலும், ஆற்றங்கரைகளிலும் குளக்கரைகளிலும், ஆலமரத்தடிகளிலும் அரசமரத்தடிகளிலும் எல்லாம் **விநாயகப் பெருமான்** எழுந்தருளி விளங்குதல் காணலாம். அத்துணையளவுக்கு மக்களாற் பெரிதும் விரும்பித் தொழப் பெறுபவரும், எங்கும் எவர்க்கும் எளிவந்தருளும் இயல்பினராகத் திகழ்பவர் விநாயகப் பெருமான்! தலைவர்களுக்கெல்லாம் **மேலான தலைவர்** விநாயகர் (வி-மேலான; விஞ்ஞானம் என்பதிற் போல). தாமே மேலான தலைவராதலின், **தமக்கு ஒருதலைவரும் இல்லாதவர்** விநாயகர் (வி-இன்மை; விமலன் என்பதிற் போல).

பழமையும் பெருமையும் :

விநாயகர் வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. நம் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, இந்தியக் கலாசாரம் பரவியுள்ள **ஜாவா, பாலி, சுமத்திரா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், கம்போடியா, சம்பா, அன்னம், சயாம், மலேயா, பர்மா, சிலோன்** போன்ற ஏனைய பிற அயல் நாடுகளிலுங்கூட, விநாயகர் வழிபாடு பரவியிருக்கின்றது.

திரு. சமன்லால் (Chaman Lal) என்பவர் எழுதியுள்ள **"இந்து அமெரிக்கா"**

(Hindu America) என்னும் நூலில், மெக்சிகோ (Mexico) பெரு (Peru) முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளிலும் கூட, மிகப் பழங்காலத்திலேயே விநாயகர் வழிபாடு பரவியிருந்ததென்று பல சான்றுகளுடன் விளக்கி நிறுவுகின்றார் *(1)*.

சர் மானியர் வில்லியம்ஸ் (Sir Monier Williams) என்னும் பேரறிஞர், **ஜேனஸ்** (Janus) என்னும் உரோம நாட்டுக் கடவுளுக்கும், **கணேசர்** (Ganesh) என்னும் நம் இந்திய நாட்டுக் கடவுளுக்கும் இடையே தொடர்பும் ஒப்புமையும் இருப்பதாகக் கருதுகின்றார். எச் செயலையும் தொடங்குதற்கு முன்னர் முதற்கண் வழிபடப் பெறும் கடவுளாகக் கணேசர் நம் நாட்டில் விளங்குதல் போலவே, உரோம நாட்டிலும் ஜேனஸ் (Janus) என்னும் கடவுள் விளங்கி வந்திருக்கின்றார். அதனாலேயே ஓர் ஆண்டிற்குரிய மாதங்களுள் முதல் மாதமானது, **ஜேனஸ்** (Janus) என்னும் கடவுளின் பெயரை ஒட்டி, **ஜனவரி** (January) எனப் பெயர் வைத்து, அங்கு வழங்கப் பெறுவதாயிற்று.

ஏறத்தாழக் கி. மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப் பெறும் **அமராவதிச்** சிற்பங்களுள் விநாயகர் திருவுருவும் காணப்படுவதாக **டாக்டர் ஜெ. பர்கெஸ்** (Dr. J. Burgess) என்பவர் குறிப்பிடுகின்றார்.

இந்துமதம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது. வேதங்கள் மிகவும் பழமை வாய்ந்தவை. 'மனிதகுல வரலாற்றிலேயே மிகவும் பழமை வாய்ந்ததாக எஞ்சி நிற்கும் இலக்கியச் சின்னம் வடமொழி வேதமே' *(2)* என **மாக்சுமுல்லர்** என்னும் பேரறிஞர் கூறுகின்றார். வேதங்கள் எவ்வளவு குறைவாகப் பார்த்தாலும் கி.மு. 1500 ஆண்டுகட்கு முற்பட்டன என்பதில் ஐயமில்லை. *(3)*

---

(1) The Hindu God of luck, **Ganesha,** was worshipped all over the **Pacific** and in **America,** as is evident from a picture given in Hewitt's book......This picture is taken from one of the sculptures in the great Mexican temple at **Copan**......This god of the elephant's trunk is also frequently depicted in Mexican manuscripts and in the temple ruins in **Central America** as the god with a proboscis-like horn, whence water is squirting, and his head is most frequently portrayed on the corners of temple walls, which are always built with reference to the cardinal points... ..This symbol, the Mexican form of the Indian elephant god **Ganesha,** must have been brought into this Country, where no elephant has ever been seen, from **India,** where elephants are indigenous and sacred as symbols of the rain-god."

—**Chaman Lal, Hindu America, p. 185-187.**

(2) "There exists no literary relic that carries us back to a more **ancient** state in the history of mankind than the **Vedas.**"

—**Prof. MaxMuller,** Chips from a German Workshop, Vol. I, p. 4.

(3) "Some Indian Scholars assign the Vedic hymns to 3000 B.C., others to 6000 B.C. The late **Mr. Tilak** dates the hymns about 4500 B.C., the Brahmanas 2500 B.C., the early Upanishads 1600 B.C. **Jacobi** puts the hymns at 4500 B.C. We assign them to the 15th century B.C. and trust that our date will not be challenged as being too early."

—**Dr. S. Radhakrishnan,** Indian Philosophy, Vol. I, p. 67.

Edi...

(Admn.) Dept., Madras-34. Printed at Manorama Press, 39, M. J. B. St., Madras...

வேதங்களுள் மிகவும் முதன்மையும் பழமையும் வாய்ந்தது இருக்கு வேதம். அதன்கண் கணபதி பற்றிய குறிப்பு **"கணானாம்த்வாம் கணபதீம் அவாமஹே"** என வந்திருக்கின்றது. கணங்களுக்குத் தலைவர் கணபதி. இவரைப் **'பிரமணஸ்பதி'** என வேதம் புகழ்கின்றது. தைத்திரீய ஆரண்யகம் இறைவனைத் **'தந்திந்'** எனக் குறிப்பிடுகின்றது. இதன் பொருள் 'தந்தத்தை உடையவர்' என்பதாகும். எனவே, இச்சொல் விநாயகரையே குறிக்கின்றது என்பது தெளிவு. கணபதி காயத்திரி மந்திரத்திலும் **"தந்நோதந்திந் பிரசோதயாத்"** என்புழி 'தந்திந்' என்ற பெயர் குறிப்பிடப் பெற்றிருப்பதும், விநாயகரின் பழமையை வலியுறுத்தும்.

இந்நாளில் சித்திரையை முதல் மாதமாகக் கொண்டு ஓர் ஆண்டு கணிக்கப் பெற்று வருகின்றது. இங்ஙனமின்றி மிகப் பழங்காலத்தில் ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு மாதங்களைக் கணித்தல் அறிஞர்களின் வழக்கமாக இருந்து வந்தது. ஞாயிற்றுக்குரிய ஓரை **சிங்கவோரை** என்றும், அதற்குரிய திங்கள் **ஆவணி** யாதலின், ஆவணி தொடங்கி மாதங்களை எண்ணுதல் ஒரு முறை என்றும் பண்டையோர்கள் கொண்டிருந்தனர். இவ்வுண்மை,

> "கால உரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை (ஆவணி) முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடக வோரை (ஆடி) ஈறுக வந்து முடியுந் துணையும் ஓர் யாண்டு ஆம். ஆதலின், அதனை இம் முறையானே அறுவகைப் படுத்து இரண்டு திங்கள் ஒரு காலம் ஆக்கினர்"

என ஆசிரியர் **நச்சினார்க்கினியர்**, "காரும் மாலையும் முல்லை" எனவரும் **தொல்காப்பிய நூற்பாவின்** உரையிற் கூறியுள்ளது கொண்டும் தெளியப்படும். இவ்வாறு ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு கணிக்கும் முறை சுமார் 7000 ஆண்டுகட்கு முன் தொடங்கியிருத்தல் வேண்டும் என வான நூல் (Astronomy) ஆராய்ச்சி வல்லார் கருதுகின்றனர்.

ஆவணி மாதம், ஆண்டின் முதல் மாதமாகக் கருதிக் கணிக்கப் பெற்று வந்த அப் பழங்கால முதலே, விநாயகர் வழிபாடும் தோன்றி நிலவி வரத் தலைப்பட்டிருத்தல் வேண்டும்! இன்னோரன்ன செய்திகளால், விநாயகர் வழிபாட்டின் பழமையும் பெருமையும் விளங்குதல் காணலாம்.

ஓங்கார மந்திரம் :

எல்லாப் பொருள்களுக்கும், எல்லா உயிர்களுக்கும் முதலாய் நிற்கும் எல்லாம் வல்ல இறைவனை வழிபடும் முறைகளைக் கண்டுணர்ந்த நம் பண்டைப் பெரு முன்னோர்கள், இறைவனை வழிபடுதற்குரிய மந்திரங்களுள் ஒன்றுகவும், தலைசிறந்ததாகவும், ஓங்காரம் என்பதனைக் கண்டறிந்தனர். எல்லா எழுத்தின் ஓசைகட்கும் முதலாய் இயல்பாகத் தோன்றி ஓவாது ஒலி செய்து கொண்டிருக்கும் 'ஓ' என்னும் ஒலியே **ஓங்காரம்** எனப்படும். இவ் வியற்கை முதலோசை வடமொழியிற் 'ப்ரணவம்'

என்று வழங்கப்படுகின்றது. '**ப்ரண**' என்னும் சொல் '**பழைய்**' என்னும் பொருளைத் தரும். எனவே, 'ஓ' என்னும் ஓசை ஏனை எல்லா ஓசைகட்கும் முற்பட்டதாய் இயற்கையே தோன்றி இயங்கும் பழமையுடையதாதல் பற்றி, ஓங்காரம், '**பிரணவம்**' எனப் பெயர் பெற்றது.

பிரணவம் எனப்படும் ஓங்கார ஒலியைப் பிரித்துக் காண முற்படின், அஃது **அ + உ + ம்** என்னும் மூன்று ஒலிகளாய்ப் பிரியும். இவற்றுள் **அகார ஒலி** எல்லாச் செயற்கை ஒலிகட்கும் முதற் பிரிந்து படைத்தற் றொழிலைப் புரியும்; **உகார ஒலி** அதன்பின்னே தோன்றிச் சிறிது நேரம் நிற்பதாகலின், அது படைக்கப்பட்ட பொருள்களைத் தத்தம் கால எல்லையளவு நிலைநிற்கச் செய்தலாகிய காத்தற்றொழிலைப் பிரியும்; **மகார ஒலி** உதடுகள் இரண்டும் சேர்ந்து முடிவதாகலின், அஃது அங்ஙனம் நிலைபெற்ற பொருள்களை அழிந்து போகச் செய்யும். இவ்வாறு படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களையும் நிகழ்த்த வல்லதாகத் திகழ்தல் பற்றியே, ஓங்காரம் மிக்க சிறப்புடைய பெருமந்திரம் என மதிக்கப் பெறுகின்றது.

மேலும் நமதுடம்பின்கண் உள்ள சிறந்த உறுப்புக்கள் அத்துணையும் ஓங்கார வடிவினவாகவே திகழ்கின்றன. நமதுடம்பின் வளர்ச்சிக்கும் இயக்கத்திற்கும் இன்றியமையாத கருவியான **நெஞ்சப்பை (Heart)**யின் வடிவமானது, தாமரை முகையை ஒத்து ஓங்கார வடிவமாகவே அமைந்திருக்கின்றது. இங்ஙனமே மூளை, **இரைப்பை, மலக்குடர், சிறுநீர்ப்பை, கருப்பை** முதலியன பலவும் கூட, ஓங்கார வடிவம் உடையனவாகக் காணப்பெறுகின்றன. ஒலிகளையெல்லாம் கேட்பதற்குரிய கருவியாகத் திகழும் காதும் கூட, ஓங்கார வடிவம் பெற்றே விளங்குகின்றது. இவ்வியற்கையமைப்புகள் அனைத்தும் ஓங்காரத்தின் சிறப்பையே உணர்த்தி நிற்றல் காணலாம்.

ஓங்காரத்தின் பிரிவெழுத்துக்கள் ஆகிய அகார உகார மகாரம் என்னும் மூன்றில், முதல் நின்ற அகாரம் இருக்கு வேத முதல் மந்திரம் ஆகிய "**அக்நிமீளே**" என்பதன் முதலிலும், இடைநின்ற உகாரம் எசுர் வேதத்தின் இடையிலுள்ள "**யோநிஸ் சமுத்திரோ பந்து**" என்பதன் நடுவிலும், கடைநின்ற மகாரம் சாமவேதத்தின் இறுதியிலுள்ள "**சமாநம்வரம்**" என்பதன் ஈற்றிலும் நின்று, வேதங்களெல்லாம் ஓம் என்னும் மொழியின் பொருளேயாம் என்பதனை அறிவிக்கின்றன என அறிஞர்கள் கூறுவர். இங்ஙனமே தமிழ்மறைகளாகிய சைவத் **திருமுறைகள்** பன்னிரண்டும் கூட ஓங்காரத்தின் உட்பொருளாதல், யாவரும் இனிதறிந்தது.

யானை முகம் :

விநாயகப் பெருமான் பிரணவம் ஆகிய ஓங்கார மந்திர சொரூபமாக விளங்குபவர் என்பதனையே, அவர்தம் யானைமுகத் திருவுருவம் புலப்படுத்தி நிற்கின்றது. ஓங்கார மந்திரவுருவினை மக்கள்தம் கட்புலம் கொளக் காணும் ஒரு

சிறந்த வடிவிலே வைத்துக் காட்டி யுணர்த்த விரும்பிய நம் முன்னோர்கள், யானையின் முகமும் அதன் தொங்கி நீண்டு சுருளும் துதிக்கையும் 'ஓ' என்னும் எழுத்தின் வடிவத்தை முழுவதும் ஒத்திருத்தல் கண்டு, அதனையே விநாயகப் பெருமானின் திருவுருவமாக அமைத்துப் போற்றி வழிபட்டு வருகின்றனர்.

எல்லா உயிர்ப் பொருள்களிலும் முழுமுதற் கடவுள் ஒருவரே பெரியராதல் போல, எல்லா உயிர்களிலும் யானையே உருவத்தாலும் வலிமையாலும் பெரிய தொன்றாக விளங்குகின்றது. கடவுள் தன்னை அன்பினால் உருகி வழிபடும் அடியவர்க்கு எளியராய், அவர் வேண்டுவன எல்லாம் விரும்பிச் செய்தல் போல, யானையும் தன்னிடம் அன்பு கொண்டு பழகுவார்பால் தனது பெருவலிமையினைக் காட்டாமல், அவர்கட்கு மிகவும் அடங்கிப் பணிந்தொழுகி, அவர்கள் வேண்டும் உதவிகள் பலவும் செய்து பெரிதும் பயன்படுவதொன்றாகத் திகழ்கின்றது. இனைய பல பண்பொப்புமைகளும். விநாயகரை யானை எனவே கொண்டு, கவிஞர்கள் போற்றி வழிபட்டு மகிழ்தற்குக் காரணங்களாயின!

திருவுருவச் சிறப்பு :

விநாயகரின் திருவுருவம் நம் உடம்பைப் போன்றதன்று. விநாயகப் பெருமானின் திருமேனி, நம்முடைய கருமேனி கழிக்க வந்த கருணைத் திருமேனி. அது ஞானவடிவமே யாகிய திருமேனி! விநாயகரின் திருவுருவம், யானை முகமும் மூன்று கண்களும் இரு செவிகளும் ஐந்து கால்களும் ஒரு பெரிய வயிறும் இரு குறுகிய திருவடிகளும் கொண்டது. யானைமுகம் விநாயகப் பெருமான் பிரணவ வடிவினர் என்பதை யுணர்த்தும். மூன்று கண்களும் ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்று ஒளிப்பொருள்களையும் குறிக்கும். ஐங்கரங்களும், அவர் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்பவர் என்பதைப் புலப்படுத்தும்.

அவர்தம் கைகளுள் ஒன்றில் தம் பொருட்டு மோதகம் வைத்திருக்கின்றார்; மற்றொரு கையில் தேவர்களைக் காப்பதற்காகத் தந்தம் ஏந்தியிருக்கின்றார்; பிறிதொரு கையில், தம்முடைய தாய் தந்தையர் ஆகிய பார்வதி பரமேசுவரர்களை அபிஷேகம் செய்து வழிபடுதற் பொருட்டு, நீர்க்கலசம் தாங்கியிருக்கின்றார்; ஏனைய இரண்டு கைகளிலும், உயிர்களாகிய நம்மை ஆணவமலம் ஆகிய யானையானது பற்றி நலிவுறுத்தாதிருக்குமாறு செய்தற் பொருட்டுப் பாசமும் அங்குசமும் வைத்துக் கொண்டிருக்கின்றார்!

விநாயகரே ஒரு யானையாக இருந்தும், யானைகளை அடக்கும் கருவிகள் ஆகிய அங்குச பாசங்களை ஏந்தியிருப்பது, அவர் தமக்கொரு தலைவரை இன்றித் தாமே யாவர்க்கும் தலைவராக விளங்கும் தனி முதன்மைத் தன்மையினைத் தெளிவிக்கும். மும்மலங்கள் ஆகிய மதம் பிடித்து, ஞானம் என்னும் கம்பத்தினை யுடைத்தெறிந்து, அன்பு ஆகிய சங்கிலி

யை அறுத்துக்கொண்டு, அருள் என்னும் கூடத்தை விட்டு நீங்கி, உலகமாகிய பெருங்காட்டில் மேய்ந்துகொண்டு, எப்பாகர்கட்கும் அடங்காதனவாக இயங்கி வரும் உயிர்கள் ஆகிய யானைகளை அடக்கியாண்டு கொண்டு அருள் புரிவதற்கு அடையாளமாகவே, விநாயகர் அங்குச பாசங்களைத் தாங்கியிருக்கின்றார் என்றலும் ஒன்று.

விநாயகருடைய திருமேனியை உற்று நோக்கினால், மேலும் பல அரிய உண்மைகள் புலனாகும். ஒரு புறம் மருப்புடைமையால் **ஆண்** எனவும், மற்றொரு புறம் மருப்பின்மையாற் **பெண்** எனவும், இங்ஙனம் இருதிறமும் விரவி நிற்றலால் **அலி** எனவும் அவர் இயங்குகின்றார். அவர் தம் திருவுருவம் உயர்திணையாகவும் விளங்குகின்றது; அஃறிணையாகவும் இருக்கின்றது. தலை யானைத் தலையாகவும், உடல் தேவ உடலாகவும், கால் குறட்பூதமாகவும் அமைந்து, விநாயகர் எல்லாமாய் அல்லவுமாய் விளங்குதலை அறிவுறுத்துகின்றது.

மிகப் பெரிய யானை வடிவமுடைய விநாயகர், மிகச் சிறிய பெருச்சாளியை வாகனமாகக் கொண்டிருப்பது, அவரே எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாகவும் ஆதேயமாகவும், தாங்கும் நிலையிலும் தாங்கப்பெறும் நிலையிலும் விளங்கி வருகின்றார் என்னும் உண்மையைப் புலப்படுத்துகின்றது.

விநாயகர் **சித்தி - புத்தி** என்னும் இரு சக்திகளையும் தமக்குரிய தேவிமாராகக் கொண்டிருக்கின்றார். அவரை வணங்கினால், நமக்குச் சித்தி (நற்பேறு) புத்தி (நல்லறிவு) வாய்த்தல் திண்ணம் என்பது கருத்து.

பாலகங்காதர திலகர் :

பம்பாய் மாகாண (மகாராஷ்டிர)ப் பகுதியில் விநாயகர் மிகவும் சிறப்பாகப் போற்றி வழிபடப் பெறுகின்றார். அங்கு அரசு செலுத்திவந்த பேஷ்வாக்கள் (Peshwas) விநாயகப் பெருமானைத் தம்முடைய குடும்பத் தெய்வம் (the family deity) எனக்கொண்டு சிறப்புற வழிபட்டு வந்தனர். அவர்களால் அங்கே புகழ்பெற்ற விநாயகர் கோயில்கள் பல கட்டப் பெற்றிருக்கின்றன. **பாலகங்காதர திலகர்** அவர்கள், மக்களிடையே தேசிய உணர்ச்சி பரவிப் பெருகும் வகையில், விநாயக சதுர்த்தி விழாவினை ஒரு பெருந் தேசிய விழாவைப் போலக் கொண்டாடுதற்கு, ஆக்கமும் ஊக்கமும் அளித்துப் பரப்பிப் பெருந் தொண்டாற்றினார்.

விநாயகர் ஒருவரே, ஒரு சில தலங்களில் வெவ்வேறு பெயர்களுடனும் வரலாறுகளுடனும், தனிச் சிறப்பாக வழிபடப் பெறுதலைக் காண்கின்றோம். அத்தகைய தல விநாயகர்களுள் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒரு சிலரை மட்டும் ஈண்டுக் காண்போம் :-

(1) **அச்சம் தீர்த்த விநாயகர் :**

இவர் **அம்பர் மாகாளம்** என்னும் தலத்தில் உள்ளார். அத்தலத்தில்தான் **சோமாசி மாறர்** என்னும் நாயனார் ஒரு

யாகம் செய்தார். சோமாசி மாறர் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மிக நெருங்கிய நண்பர். ஆதலின் தம்முடைய யாகத்திற்குச் சிவபெருமானை அவியேற்க அழைத்துவர வேண்டும் என்று சுந்தரைச் சோமாசி மாறர் மிகவும் வேண்டிக்கொண்டார். சுந்தரர் இதனைத் தம் நண்பராகிய சிவபெருமானுக்கு விண்ணப்பம் செய்ய, அவரும் அங்ஙனமே வருவதாக இசைந்தார். ஆனால் சிவபெருமான் தம் இயல்பான திருவுருவில் யாகத்திற்கு எழுந்தருளாது நீசன் ஒருவனைப் போல வடிவங் கொண்டு வந்தார். நீசன் வருவது கண்ட சோமாசி மாறர், அவனால் தம் யாகம் புனிதம் இழந்து போகும் என்று கவன்று அச்சங் கொண்டார். அந்நிலையில் விநாயகப் பெருமான் சோமாசி மாறர்க்கு 'இவர்தான் இறைவர்' என்று குறிப்பாகச் சுட்டிக் காட்டி, அவர்தம் அச்சம் தீர்த்தருளினார். ஆதலின் அங்குள்ள விநாயகருக்கு "அச்சம் தீர்த்த விநாயகர்" எனப் பெயர் வழங்குகின்றது.

(2) **ஆபத்சகாய விநாயகர் :**

இவர் சென்னைக்கு அருகில் உள்ள திருத்தணிகை மலைமீதுள்ள கோயிலில் விளங்கும் முதன்மை சான்ற விநாயகர். முருகன் கிழவடிவம் கொண்டு வள்ளியம்மையிடம் சென்று தம்மை மணந்து கொள்ள வேண்டிய போது, அவர் இணங்க மறுக்க, முருகனின் வேண்டுகோட்படி விநாயகர் யானையாக வந்து வள்ளியம்மையை அச்சுறுத்தி, முருகனை மணந்துகொள்ள இணங்கும்படி செய்தருளினார். தம்பியாகிய முருகனுக்கு உற்ற நேரத்தில், ஆபத்தில் சகாயம் புரிந்த காரணத்தால், திருத்தணிகையில் உள்ள விநாயகப் பெருமானுக்கு இப்பெயர் ஏற்பட்டது.

(3) **ஆனை திறைகொண்ட விநாயகர் :**

இவர் திருவண்ணாமலையில் இருக்கின்றார். **சிவப்பிரகாச சுவாமிகள்** தாம் இயற்றிய **சோணசைல மாலை** யின் முதற்பாட்டில், இவரைத் துதித்து வணங்கியுள்ளார். வடதேசத்தினின்று வந்து திருவண்ணாமலையில் வசித்திருந்த **அகிலன்** என்னும் அரசன், அடியார்களுக்கும் நகரத்தவர்களுக்கும் மிக்க இடையூறு விளைத்து வந்தான். அதனைக் கேள்வியுற்ற **குகை நமச்சிவாய தேவர்** என்னும் அருட்பெருஞ் சான்றோர் "சூலம் கரத்திருக்கச் சோதி மழுவாள் இருக்க, ஆலமுண்ட கண்டத் தருள் இருக்க, மேலே எரித்த விழி இருக்க இந்நாட்சோணேசர் தரித்ததென்ன காரணமோ? தாம்" என்னும் பாடலைக் கூறித் துதித்தார். அன்று இரவு அவ்வரசனின் கனவில் விநாயகக் கடவுள் மதயானை வடிவம் கொண்டு சென்று மிகவும் அச்சுறுத்தி நலிந்தார். அவன் தன் தவற்றையுணர்ந்து நல்லவனாக மாறி, விநாயகக் கடவுளை வழிபட்டு, அவருக்குச் சில யானைகளைத் திறையாகக் கொடுத்துப் பணிந்தான். அதனால் திருவண்ணாமலையிலுள்ள விநாயகர்க்கு 'ஆனை திறை கொண்ட விநாயகர்" எனப் பெயர் அமைந்தது.

(4) **ஆனைமேல் அழகிய விநாயகர் :**

இவர் திருநெல்வேலி வட்டம் **புதூர்** என்ற ஊரில் இருக்கின்றார். பிள்ளையார்

ஆகிய விநாயகர் பெருச்சாளியின் மேல் தான் வருவார் என்று நாம் எண்ணுவோம். யானைமுகக் கடவுள் ஆகிய விநாயகர், யானைமேலும் ஊர்ந்து வந்து காட்சி யளிப்பார் என்பது, இம் மூர்த்தியாற் புலனுகின்றது.

(5) உச்சிப் பிள்ளையார் :

திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையின் உச்சியில் உள்ள இப் பெருமானை அறியாதார் ஒருவரும் இரார். மற்றும் இங்குள்ள **'செவ்வந்தி விநாயகர்' 'மாணிக்க விநாயகர்'** ஆகியோரும் பொது மக்களாற் பெரிதும் அன்புடன் போற்றப் பெறும் சிறப்புடையவராவர் !

(6) ஓலமிட்ட விநாயகர் :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவையாறு நோக்கிச் சென்றபோது, காவிரியாற்றில் மிகுந்த வெள்ளமாக இருந்தது. அதனுல் அவர் ஆற்றின் தென் கரையில் இருந்து, "ஐயாறுடைய அடிகளோ" என அழைக்கும் திருப்பதிகத்தைப் பாடினுர். ஆற்றின் வட கரையில் வீற்றிருக்கும் பிள்ளையார், கன்று அழைப்பது கேட்டுக் கதறிக் கனைக்கின்ற பசுவைப் போல, எல்லா உயிர்களும் கேட்கும்படி "ஓலம்" "ஓலம்" என்று எதிர் விடை கொடுத்தருளினுர். பின்னர்க் காவிரியாற்று வெள்ளம் வழிவிடச் சுந்தரர் திருவையாறு அடைந்து, ஐயாறப்பனை வணங்கி மகிழ்ந்தார். இக் காரணத்தால் திருவையாற்றிலுள்ள விநாயகருக்கு "ஓலமிட்ட விநாயகர்" எனப் பெயர் ஏற்படுவதாயிற்று.

(7) ஐங்கலக்காசு விநாயகர் :

இவர் திருவாரூர்ப் பெருவிழாவில் உற்சவம் கொண்டருள்பவர். இவர் திருவாரூரில் தியாகர், வன்மீக நாதர் சந்நிதிகளின் இடையில் எழுந்தருள்கின்ருர். இவருக்கு 'அழகிய சோழ விநாயகர்' என்றும் ஒரு பெயர் உண்டு. திருவாரூர்க் கோயிலில் உள்ள 'அழகியான் கோபுரம்' அமைத்த சோழ மன்னனே, ஐந்துகலம் நிறையக் காசுகள் கொண்டு, இப் பெருமானை அமைத்தனன் என்றும், அதனுல் இவர்க்கு இப் பெயர் வழங்குகின்றது என்றும் கூறுவர். **ஐந்நூற்றும் பிள்ளையார்** திருவாரூர் விஜயபுரம் பகுதியிலும், திருவிடைக்கழியிலும் சிறப்புற்று விளங்குகின்ருர். தில்லை மூவாயிரவர், திருவாவடுதுறை ஆயிரவர் போன்று, ஐந்நூற்றுவர் என்னும் ஒரு குழுவினர் இவரைச் சிறப்புமுறையில் வழிபட்டது பற்றி, இவருக்கு இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

(8) கடுக்காய்ப் பிள்ளையார் :

திருவாரூருக்கு அருகில் உள்ள 'திருக்காருயில்' என்னும் தலத்தில், 'இந்திர தீர்த்தம்' என்னும் குளத்தின் வட கரையில் இருப்பவர். வாணிகன் ஒருவன் சாதிக்காய் மூட்டைகளைக் கடுக்காய் மூட்டைகள் என்று பொய் சொல்லி, அது பின்னர்க் கடுக்காய் மூட்டைகளாகவே மாறியிருக்கக் கண்டு, தன் தவற்றையுணர்ந்து வருந்திப் பணிந்து வேண்டிக் கொள்ள, இவ்விநாயகரின் அருளால் அவைகள் முன் போலவே சாதிக்காய் மூட்டைகளாகவே மாறின. இங்ஙனம்

விநாயகர், திருமங்கலம்.

விநாயகர், கயத்தாறு.

ஸ்ரீ விநாயகர், மணம் தவிர்ந்தபுத்தூர்.

ஸ்ரீ லட்சுமி விநாயகர், திருவாமாத்தூர்.

ஸ்ரீ பஞ்சமுக விநாயகர், திருநாகைக்காரோணம்.

கூத்தாடும் பிள்ளையார், மயிலாப்பூர்.

பொய் சொல்லிப் பிழை யுணர்ந்து வருந்தி வேண்டிக் கேட்டுக் கொண்ட அன்பனின் பொருட்டுக் கடுக்காய்களை மாற்றி அருள்புரிந்த காரணத்தால், இவர் "கடுக்காய்ப் பிள்ளையார்" எனச் சிறப்புப் பெயர் பெற்ருர்.

(9) கரும்பு ஆயிரம் கொண்ட விநாயகர் :

இவர் கும்பகோணத்தில் உள்ள ஒரு விநாயகர். கரும்புகளை ஏற்றிக்கொண்டு வந்த வாணிகன் ஒருவன், 'ஒரு கரும்பு தா' எனக் கேட்ட ஒரு பெரியவருக்கு, 'இவை பேய்க் கரும்புகள். தின்பதற்குக் கசப்பாக இருக்கும்' என்று பொய் சொல்லித் தர மறுத்துவிட்டான். அவன் பொய் கூறியதின் பயனுக, அவன் ஏற்றிச் சென்ற நல்ல கரும்புகள் பேய்க் கரும்புகள் ஆகவே மாறிவிட்டன. அது கண்டு அவன் வருந்தி மிகவும் பணிந்து விநாயகரை வேண்டிக் கொண்டான். அவருக்கு ஆயிரம் கரும்புகள் காணிக்கை செலுத்துவதாகப் பிரார்த்தித்துக் கொண்டான். பிறகு அவைகள் நல்ல கரும்புகள் ஆயின. ஆதலால் இவருக்குக் "கரும்பு ஆயிரம் கொண்ட விநாயகர்" எனப் பெயர் வழங்குகின்றது.

(10) கள்ள வாரணப் பிள்ளையார் :

இவர் திருக்கடவூர் என்னும் தலத்தில் இருக்கின்ருர். திருப்பாற்கடல் கடைந்து அமிழ்த கலசம் பெற்ற தேவர்கள், முதற்கண் தம்மை வழிபட நினைவில்லாமலே அதனை யுண்ணக் கருதுதல் உணர்ந்து, அவர்கள் பெற்ற அமிழ்த கலசத்தினை மறைத்து வைத்து விட்டு, அவர்கள் பிழையுணர்ந்து வருந்திப் பணிந்து வேண்டிக் கொண்ட பொழுது, அதனை அவர்களுக்கு வெளிப்படுத்திக் கொடுத்து அருள் புரிந்தார். அமிழ்த கலசம் காணுது போகும்படி கள்ளம் செய்த காரணம் பற்றி, இவர் "கள்ள வாரணப் பிள்ளையார்" எனப் பெயர் பெற்ருர்.

(11) கற்பக விநாயகர் :

தில்லைச் சிதம்பரம் போன்ற கோயில்கள் பலவற்றில், இப்பெயருடன் விநாயகர் விளங்குகின்ருர். தேவருலகில் உள்ள கற்பகமரம் தன் கீழ் இருந்து வேண்டுவோர் வேண்டுவன எல்லாம் கொடுத்தல் போல, தம்மைச் சார்ந்து வழிபடும் அடியவர்கள் வேண்டுவன எல்லாம் தரும் பெருமாளுதல் பற்றி, இவருக்குக் 'கற்பக விநாயகர்' எனப் பெயர் அமைந்தது. அடியார்களின் உள்ளமாகிய வயலில் முளைத்து, கருணையாகிய தழை தளிர்த்து, அறம் அரும்பி, ஞானம் பூத்து, வினைகளைக் காய்வித்து, முத்தி பழுத்து, இன்ப நறுஞ்சுவை என்றும் நல்கும் ஒரு கற்பக மரம் போலப் பொலிதலின், இவருக்குக் "கற்பக விநாயகர்" எனப் பெயர் அமைந்தது எனினும் பொருந்தும்.

(12) கூப்பிடு விநாயகர் :

இவர் திருமுருகன் பூண்டி என்னும் தலத்துக்கு அருகில், அவிநாசிக்குப் போகும் வழியில் எழுந்தருளி யிருக்கின்ருர். சுந்தர மூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனுரிடம் இருந்து

ஏராளமான பொன்னும் பொருளும் அன்பளிப்பாகப் பெற்று வரும்போது, சிவபெருமான் சுந்தரர்பால் தாம் கொண்ட நட்புரிமையால் விளையாட்டாக அவரை நலிவுறுத்த விரும்பி, பூத கணங்களை வேடர்கள் வடிவில் ஏவி, அவற்றை யெல்லாம் கொள்ளை யடித்து மறைத்து வைத்திருக்கச் செய்தார். சுந்தரர் பின்னர்த் திரு திருகன் பூண்டி சென்று 'கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்,' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி இறைவனைப் பணிந்தார். அந்நிலையில், வழிமறித்து நிதி பறித்த இறைவன் அதனை மறைத்து வைத்திருக்கும் இடத்தினை விநாயகர் சுந்தர மூர்த்திகளுக்குக் கூவிக் குறிப்பிட்டுக் காட்டி அருளினர். இங்ஙனம் கூவிக் கூப்பிட்டுச் சுந்தரருக்கு அருள் புரிந்ததனல், இவருக்குக் "கூப்பிடு பிள்ளையார்" எனப் பெயர் ஏற்பட்டது.

(13) கைகாட்டி விநாயகர் :

திருவாரூர்க்கு அண்மையில், திருநாட்டியத்தான் குடி என்னும் தலத்தில் உள்ள விநாயகர், கோட்புலி நாயனரின் அவதாரத் தலமாகிய இத்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்ற பொழுது, சிவபிரானை முதற்கண் காணப் பெருமல், விநாயகப் பெருமானை 'இறைவர் எங்குள்ளார்' என வினவ, அவர் சிவபிரான் இருந்த இடத்தைத் தம் கையை நீட்டிச் சுட்டிக் காட்டியருளினர். அதனல் இங்குள்ள விநாயகருக்குக் "கூப்பிடு பிள்ளையார்" எனப் பெயர் அமைந்தது.

(14) சித்தி விநாயகர் :

மதுரை ஆலவாய் அங்கயற்கண்ணி அம்மை கோயிலில் உள்ள விநாயகரின் பெயர். "சத்தியாய்ச் சிவமாகித் தனிப் பர முத்தியான முதலைத் துதிசெயச் சுத் தியாகிய சொற்பொருள் நல்குவ **சித்தி யானை** தன் செய்ய பொற் பாதமே" என்பது திருவிளையாடற் புராணக் காப்புச் செய்யுள். 'உள்ளம் ஆகிய 'சாலையில், ஊக்கம் என்னும் கம்பம் நாட்டி, அன்பு என்னும் சங்கிலியைப் பூட்டி, பசுபோதம் என்னும் உணவுருண்டையினை இட, அதனை யுண்டு மகிழ்ந்து கருணை என்னும் வெள்ளமதநீர் பொழிபவர் **சித்திவிநாயகர்**' எனப் **பரஞ்சோதி முனிவர்**, இவர்தம் பெருமையைப் பாடி மகிழ்கின்ருர். அன்பர்கள் வேண்டும் நலங்கள் சிந்திக்கும்படி செய்தருள்பவராதலின், இவர் 'சித்தி விநாயகர்' எனப்படுகின்ருர். வரசித்தி விநாயகர், இஷ்ட சித்தி விநாயகர் எனவும், இவர் பல இடங்களில் கோயில்கொண்டு திகழ்கின்ருர்.

(15) செங்கழுநீர் விநாயகர் :

சிதம்பரத்திலும், சென்னை நகரம் போன்ற இடங்களிலும், இவர் கோயில் கொண்டு விளங்குகின்ருர். பவளமேனியராகச் சிவந்த நிறம் கொண்டு திகழும் விநாயகர், செங்கழுநீர் மலரைப் பெரிதும் விரும்புபவர் போலும்! அதனல் இவர்க்கு இப்பெயர் வழங்குகின்றது. ஆசிரியர் மாதவச் **சிவஞான சுவாமிகள்** பாடியருளியுள்ள "கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்" எனச் சிறந்த நூல், ஈண்டு நாம் நினைத்து மகிழ் தற்குரியது.

(16) செவிசாய்த்த விநாயகர்:

'லால்குடி' என இந்நாளில் வழங்கும் திருத்தவத்துறை என்னும் தலத்திற்கு அண்மையில் உள்ள "அன்பில் ஆலந்துறை" என்னும் தலத்தின் கோயிற் பிராகாரத்தில் இப்பெருமான் வீற்றிருக்கின்றார். கொள்ளிடத்தின் தென் கரையில் வந்து அப்பர்சுவாமிகளும், திருஞான சம்பந்தப் பெருமானும் பாடிய தேவாரத்தில் பாடல்களைச் செவி சாய்த்துக் கேட்டு, இங்குள்ள விநாயகர் மகிழ்ந்தருளினர் என்பது வரலாறு. ஆதலின் இவர் 'செவிசாய்த்த விநாயகர்' எனப் போற்றப்படுகின்றார். அடியவர்களின் முறையீடுகளையும் விண்ணப்பங்களையுமெல்லாம் உடனுக்குடனே கேட்டுத் தீர்த்து வைத்து அருள்புரிதற் பொருட்டு, எப்போதுமே செவிசாய்த்து வைத்துக் கொண்டிருக்கும் பேரருளுடைய பெருமானுதல் பற்றி, இவருக்கு இப்பெயர் அமைந்திருந்தல் கூடும்!

(17) ஞான விநாயகர்:

திருநாவுக்கரசர் இறைவனோடு இரண்டறக் கலந்த புனித தலம் ஆகிய திருப்புகலூரில், தெற்கு மடவளாகத்தில் இவர் வீற்றிருந் தருள்கின்றார். "திருப்புகலூர் அந்தாதி" என்னும் சிறந்த நூலைப் பாடிய **நெற்குன்றவாணர்** என்னும் பெருந்தகை, இப்பெருமானையே தம் வழிபடு கடவுளாகக் கொண்டிருந்தனர் என்பது வரலாறு.

(18). தஞ்சை நிலைய அரசடிப்பிள்ளையார்:

இப்பெருமான் தஞ்சை இருப்புப் பாதை நிலையத்தின் உள்ளே எழுந்தருளி விளங்குகின்றார். அண்மைக் காலத்திலேயே கோயில் கொண்டருளினரேனும், மிகவும் அருள்ளாளராகப் போற்றப் பெறுகின்றார். சைவச் சான்றோர் தவத்திரு, **சம்பந்த சரணாலய சுவாமிகள்** (சிவக் கவிமணி), புலவரேறு **அ. வரதநஞ்சைய பிள்ளை,** துடிசைகிழார் **அ. சிதம்பரனார்.** பவானி **அ. குமாரசாமிபிள்ளை** என்னும் புலவர் பெருமக்கள் நால்வரும், ஒரு சமயம் தமது வழிப் பயணத்திற் சிறிது நேரம் தங்க நேர்ந்தபொழுது, இப்பெருமானை வழிபட்டு, ஆசுகவியாக விரைந்து ஒவ்வொரு பாடல் பாடுவதெனத் தீர்மானித்து, வெண்பா - கட்டளைக் கலித்துறை - ஆசிரிய விருத்தம் - அகவற்பா என்னும் நால்வகைப் பாடல்கள் பாடினர். நான்கு புலவர்கள் வாயினின்று வெளிவந்தன ஆதலாலும், நால்வாய் (யானை) ஆகிய விநாயகரைப்பற்றி அமைந்தமையாலும், அப்பாடல்களை **"நால்வாய்ச் செழுந் தமிழ்"** என்னும் தலைப்பில் சுவைநலம் பெருகச் சிவநலஞ்சான்ற **சிவக்கவிமணி** அவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்னர் (1942) ஞானசம்பந்தம் இதழில் வெளியிட்டிருக்கின்றார்கள். இங்ஙனம் இச் செஞ்சொற் புலவர்கள் பாடிப் பரவிய தனால், "தஞ்சை அரசடிப் பிள்ளையார்" தமிழன்பர்களின் உள்ளத்திற் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றார்.

(19) துணையிருந்த விநாயகர்:

திருவாரூர்க்கு அருகில் உள்ள திருப்பனையூர் என்னும் தலத்தில் இவர் வீற்றிருந்தருள்கின்றார். சோழ வேந்தர்களுள் மிகவும் புகழ் பெற்றவனாகிய **கரிகாற் சோழன்** என்னும் மன்னவன்,

மிக இளைஞனாக இருந்தபோதே **உருவப் ப∴றேர் இளஞ்சேட் சென்னி** என்னும் அவன் தந்தை இயற்கை எய்தி மறைந்து விட்டான். அந்நிலையில் இளஞ்சிறுவனாக இருந்து வந்த கரிகாலனைக் கொலை செய்துவிட்டு நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளப் பகைவர்கள் பெருஞ் சூழ்ச்சிகள் புரிந்து வந்தனர். கரிகாலனை எப்படியும் காப்பாற்றி வளர்த்துச் சோழப் பேரரசனாக முடிசூட்டி வைக்க அவனது தாய்மாமன் ஆகிய **இரும்பிடர்த் தலையார்** என்னும் சங்ககாலப் புலவர் பெரிதும் பாடுபட்டு வந்தார். கரிகாற் சோழன் பகைவர்களின் சூழ்ச்சிகளுக்குத் தப்பித் திருப்பனையூர்க்கு வந்து தங்கிப் பிறர் அறியாமல் வளர்ந்து வந்தான். அப்போது அவனுக்கு எத்தகைய விபத்தும் ஏற்படாமல், இங்குள்ள விநாயகர் துணையிருந்து காப்பாற்றினர். அதனால் 'துணையிருந்த விநாயகர்' என்று இன்றும் இவர் பொதுமக்களாற் பெரிதும் போற்றப்படுகின்றார்.

குத்தாலம் என வழங்கும் 'திருத்துருத்தி' என்னும் தலத்தில் உள்ள விநாயகர்க்கும் **'துணை வந்த விநாயகர்'** எனப் பெயர் வழங்குகின்றது. தலவரலாற்றின்படி அம்பிகையை மணக்க இறைவன் கயிலையில் இருந்து இங்கு வந்தபோது, விநாயகர் இறைவனுக்குத் துணையாக உடன் வந்தார் என்பது வரலாறு.

(20) தேசி விநாயகர் :

குன்றக்குடி என்னும் முருகன் தலத்தினின்று, **திருப்புத்தூர்** (இராமநாதபுரம் மாவட்டம்) என்னும் பாடல் பெற்ற தலத்துக்குச் செல்லும் வழியில் உள்ள **பிள்ளையார்பட்டி** என்னும் ஊரில் எழுந்தருளி விளங்குகின்றார் இவர்! தமிழ் நாட்டிலுள்ள விநாயகர் கோயில்களுள் எல்லாம், இராஜகோபுரங்களுடன் கூடிய மிகப் பெரிய விநாயகர் கோயில், பிள்ளையார் பட்டிக் கோயில்தான் எனலாம். இது **மகேந்திர வர்ம பல்லவன்** (கி. பி. 600-630) காலத்தில், முதன்முதல் ஏற்பட்டு, நாளடைவில் வளர்ச்சி பெற்ற பழம் பெரும் கோயில் ஆகும். இங்குள்ள விநாயகரின் பெயர் "தேசி விநாயகர்" எனக் கல்வெட்டுகள் (கி. பி. 1220, கி.பி. 1305) குறிப்பிடுகின்றன.

(21) நரமுக விநாயகர் :

இவர் சிதம்பரம் தெற்கு வீதியிற் கோயில் கொண்டுள்ளார். விநாயகரின் யானைமுகம் பற்றிப் பகுத்தறிவு வாதிகள் முறைபட்டுக் கொள்வதுண்டு. அக் குறையைப் போக்கும் முறையில், விநாயகர் இங்கு மனித முகத்துடன் எழுந்தருளி விளங்குகின்றார் போலும்! எனவே, இவர் வேறு எங்கும் காண்டற்கரிய தனிப்பெருஞ் சிறப்புடையவர் எனலாம்.

(22) படிக்காசு விநாயகர் :

இவர் திருவீழிமிழலையில் எழுந்தருளித் திகழ்கின்றார். ஒரு காலத்தில் சோழ நாட்டிற் பெரும்பஞ்சம் ஏற்பட்டது. அதுபோது சிவபெருமான், மிழலையில் தங்கியிருந்த அப்பர்க்கும் சம்பந்தர்க்கும் நாடோறும் படிக்காசு வழங்கி அருள் புரிந்தார். இப் பெரிய புராண வரலாற்றை ஒட்டி, இங்குள்ள

விநாயகர்க்குப் 'படிக்காசு விநாயகர்' எனப் பெயர் அமைவதாயிற்று. "பாரறிய அநுதினமும் வீழிமிழலைதனில் முன் **படிக்காசு வைத்த கணபதி** இரு தாள் பணிவாம்" என்பது தலபுராணத் துதிப்பாடல்.

(23) **பிரசந்ந விநாயகர்:**

சென்னையில் உள்ள இக்கோயிலிலேயே திருவாவடுதுறைக் **கச்சியப்ப முனிவர்** தாம்பாடிய **விநாயக புராணம்** என்னும் அரும்பெறல் நூலை அரங்கேற்றினர் என்பர். சென்னைப் பூக்கடை கோயில் எனவழங்கும் ஸ்ரீ சென்னை மல்லீச்சுரர் கோயிலில் உள்ள விநாயகருக்கும், இப் பெயரே வழங்குகின்றது. அடியவர் களுக்குப் பிரசந்நம் (பிரத்தியட்சம்) ஆகி விரைவில் அருள்புரிதலானும், பிரசந்ந (யானை) முகம் உடையவராதலும், இப் பெயர் ஏற்பட்டது.

(24) **பிரளயங்காத்த விநாயகர்:**

இவர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்புறம்பயம் என்னும் தலத்தில் உள்ளார். இங்கு இவர் வெண் நிறம் உடையவராக விளங்குகின்றார். ஒரு சமயம் பிரளயம் ஏற்பட்டபோது, அதன் வெள்ளம் உட்புகாது, புறம்பேயே நிற்கும்படி செய்து, திருப்புறம்பயம் என்னும் தலத்தைக் காப்பாற்றியரு ளினர். அதனல் "பிரளயங் காத்த விநாயகர்" என இவர்க்குப் பெயர் அமைந்தது.

(25) **பொல்லாப் பிள்ளையார்:**

இவர் திருநாரையூர், திருவெண்ணெய் நல்லூர், திருவெண்காடு என்னும் தலங் களில் விளங்குகின்றார். திருநாரையூரில் **நம்பியாண்டார்** நம்பிகளாலும், திரு வெண்ணெய் நல்லூர் திருவெண்காடு என்னும் தலங்களில் **மெய்கண்ட தேவர்** பெருந்தகையாலும் இவர் வழிபடப் பெற்றார். சைவ சமயத்தின் சிறப்பியல் அருள் நூல்கள் ஆகிய திருமுறைகள் பன்னிரண்டும், சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கும் கிடைப்பதற்கு இப்பெரு மானே துணைபுரிந்தருளினர் எனலாம். "கல்லால் நிழல்மலை - வில்லார் அருளிய **பொல்லார்** இணைமலர் - நல்லார் புனை வரே" என்பது சிவஞான போத மங்கல வாழ்த்துச் செய்யுள்! பொல்லாப் பிள்ளை யார் என்பதற்கு "உளியாற் **பொள்ளப் படாமல்** (செதுக்கப்படாமல்) இயல் பாகத் தோன்றியருளிய சுயம்பு மூர்த்தி" என்பது பொருள். '**பொள்ளா** என்பது 'பொல்லா' என வந்தது.

(26) **மணக்குள விநாயகர்:**

இவர் பாண்டிச்சேரி நகரில் மிகவும் பிரசித்தி பெற்றுத் திகழ்பவர். தாம் கட்டிடம் அமைத்தற்கு இடையூருக இருப்பதாக நினைத்து, வெள்ளையர் சிலர் இவரை அகற்றிவிடப் பலமுறை முயன் றும் முடியாமையால், இவர்தம் சிறப்பை யுணர்ந்து வியந்து, இவர்க்குக் கோயில் அமைத்தனர். பாண்டிச்சேரியில் சில காலம் வாழ்ந்திருந்த தேசிய கவிஞர் **சுப்பிரமணிய பாரதியார்** அவர்கள், இப் பெருமானை வழிபட்டுப் பாடித் துதித் துள்ளார்.

(27) **மாற்றுரைத்த விநாயகர்:**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபிரானைப் பொன்தருமாறு வேண்டிக் கொள்ள,

அவ்வண்ணமே திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), என்னும் தலத்தில் சிவபிரான் அவர்க்குப் பொன் வழங்கி யருளினர். சுந்தரர் தமக்கு அதனைத் தூக்கிச் செல்லுதல் இயலாது என்றும், திருமுதுகுன்றத்தில் ஓடும் மணிமுத்தா நதியில் அதனை இட்டால், தமக்கு அது திருவாரூர்க் குளத்தில் கிடைத்தல் வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார், சிவபிரானும் அதற்கு இசைந்தார். அந்நிலையில் சுந்தரர் சிவபிரானை எளிதில் நம்பாதவர் போல, அப் பொன்னின் மாற்றை ஆய்ந்தறிந்து கொண்டு, அதுவே தமக்குத் திருவாரூர்க் குளத்திற் கிடைக்கின்றதா? எனச் சரிபார்க்க வேண்டும் என விரும்பினர், அதன்படியே திருமுதுகுன்றம் மணிமுத்தா நதியிலும், திருவாரூர்க் கமலாலயம் என்னும் குளத்திலும், பொன்னின்மாற்றை உரைத்துக் காட்டி விநாயகர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அருள்புரிந்தார்.

(28) **மிளகுப் பிள்ளையார் :**

திருநெல்வேலி மாவட்டம் **சேரன்மாதேவி** என்னும் ஊரின் தென்கோடியில் உள்ள குளக்கரையில், இவர் கோயில் கொண்டுள்ளார். தாமிரபரணி ஆற்றில் இருந்து அவ்வூர் வழியாக வரும் கன்னடியன் கால்வாயில், தண்ணீர் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்து போனல், மிளகினைத் தண்ணீர் விட்டு அரைத்து, இவர்மீது சாத்துகின்றனர். பின்னர் இவருடைய சிறு கோயிலின் கருவறையைத் தண்ணீரால் நிரப்புகின்றனர், பிறகு மறுநாள் அடைப்பானைத் திறந்து விட்டவுடன், தண்ணீரும் மிளகுக் குழம்பும் கலந்து ஓடிக் கால்வாயிற் பரவுகின்றன. முறை தவருமல் இது செய்யப்பட்டால், மறுநாள் கால்வாயில் தண்ணீர் மிகுதியாகப் பாய்கின்றது என மக்கள் பெரிதும் நம்பி இவரை வழிபட்டு வருகின்றனர்.

(29) **வலம்புரி விநாயகர் :**

இவர் திருவலிவலம் முதலிய பல தலங்களில் விளங்குகின்ருர். பொதுவாக விநாயகரின் துதிக்கை இடப்புறமாகவே அமைந்து வளைந்திருக்கும். ஒருசில இடங்களில் மட்டுமே, விநாயகரின் துதிக்கை வலப்புறம் அமைந்து வளைந்து விளங்குதலைக் காணலாம், இந்நிலை மிகவும் விசேடம் என்பர். **திருஞான சம்பந்தர்** விநாயகரைக் குறித்துச் சிறப்பு முறையிற் பாடியதும் தேவாரம் ஓதும் போது அனைவரும் விநாயகர் வணக்கமாக முதற்கண் எடுத்துப் பாடுவதும் ஆகிய "பிடியதன் உருவுமை கொள மிகு கரியது - வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர் - கடி **கணபதி** வர அருளினன் மிகுகொடை - வடிவினர் பயில் **வலிவலம்** உறை இறையே" என்னும் தேவாரப் பாடல் இத்தலத்து விநாயகரைக் குறித்தே எழுந்தது. **திருவலஞ்சுழி** என்னும் தலத்தில் உள்ள **வெள்ளை வாரணர்** என்னும் விநரயகரும் மிகவும் பிரசித்தி பெற்றவர் ஆவர். "வெள்ளை வாரணப் பிள்ளையார் பதம் உள்ள, ஞானமே கொள்ள லாகுமே."

(30) **வாதாவி விநாயகர் :**

இவர் திருவாரூர், திருச்செங்காட்டங்குடி முதலிய தலங்களில் எழுந்தருளி

இருக்கின்றார். **நரசிம்ம வர்ம பல்லவன்** என்னும் மன்னனின் (கி. பி. 630-638) படைத்தலைவராக விளங்கியிருந்த **பரஞ்சோதியார்** என்னும் **சிறுத்தொண்ட நாயனார்**. இரண்டாம் **புலிகேசி** என்னும் சாளுக்கிய அரசனின்மீது படையெடுத்துச் சென்று, அவனை வெற்றி கொண்ட **வாதாபி** என்னும் நகரத்தினின்று கொண்டுவந்து (கி.பி. 642) நிறுவிய காரணம் பற்றி, இவருக்கு இப்பெயர் வழங்குவதாயிற்று என வரலாற்று ராய்ச்சியாளர்கள் கூறுவர். எனவே, இவர் மிகவும் வரலாற்றுச் சிறப்பு மிக்க விநாயகர் ஆவர்.

(31) விகடசக்கர விநாயகர்:

இவர் காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் கோயில் வெளிப் பிராகாரத்தில், கம்பா நதி என்னும் தீர்த்தத்துக்கு அருகில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் வீற்றிருக்கின்றார். தக்கன் யாகத்தை அழிக்கப் போந்த வீரபத்திரர்மீது திருமால் தமது சக்கரத்தை ஏவினார். அதனை வீரபத்திரர் அணிந்திருந்த வெண்டலை ஒன்று கவ்வி விழுங்கிவிட்டது. அந்நிலையில் அந்தச் சக்கரத்தினைத் திரும்பப் பெற விரும்பித் திருமாலின் சேனைத் தலைவன் ஆகிய 'விடுவச் சேனன்' வீரபத்திரரின் முன்னர் விகடக் கூத்தாட, அது கண்டு வெண்டலை சிரித்தது. அப்போது அதன் வாயில் இருந்து சக்கரம் வெளியே வந்து விழுந்தது. அதை 'விடுவச் சேனன்' எடுக்க முந்துறும் முன்பே, விநாயகப் பெருமான் விரைந்து எடுத்து மறைத்து வைத்துக் கொண்டார். விடுவச் சேனன் மீண்டும் ஒரு முறை விநாயகர் முன்னிலையில் விகடக் கூத்து ஆடி; அவரை மகிழ்வித்து, அவரிடம் இருந்து சக்கரத்தைப் பெற்றுத் திருமாலிடம் சேர்த்தான். விகடக் கூத்து ஆடக்கண்டு மகிழ்ந்து சக்கரம் அளித்த காரணத்தால், இவர் 'விகட சக்கர விநாயகர்' எனப் பெயர் பெற்றார்.

''திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான் -
சகட சக்கரத் தாமரை நாயகன் - அகட
சக்கர வின்மணி யாவுறை - **விகட
சக்கரன்** மெய்ப்பதம் போற்றுவாம்''

என்பது **கச்சியப்ப சிவாசாரியர்** பாடிய கந்தபுராணக் காப்புச் செய்யுள்.

(32) விடம் தீர்த்த விநாயகர்:

இவர் திருமருகல் என்னும் தலத்தின் தெற்குவீதியில் தெற்குக் கோபுரவாயிலின் எதிரே விளங்குகின்றார். திருஞான சம்பந்தர் இங்குள்ள மாணிக்க வண்ணரை வழிபடப் போந்தபோது, வணிகன் ஒருவன் இரவில் பாம்பு தீண்டி இறந்துவிட, அவனை மணக்க விரும்பி அவனுடன் போந்திருந்த உறவினளாகிய கன்னிப் பெண் கலங்கிப் புலம்பி யழும் ஓசை கேட்டுச் செய்தி யறிந்து, ''சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்...உடையாய் தகுமோ? **இவள்** உண்மெலிவே'' என அவளுக்காக இரங்கிப் பதிகம்பாடி இறைவனை வேண்டி, இறந்த வணிகன் விடம் நீங்கி உயிர்பெற்று எழுமாறு செய்தருளினார். இப்பெரிய புராண வரலாற்றை ஒட்டி, இங்குள்ள விநாயகருக்கு இப்பெயர் வழங்கி வருகின்றது. இத்தலத்தின் எல்லைக்குள் பாம்பு முதலியன தீண்டுவதால் யாரும் இறப்பதில்லை என்று சொல்லப்படுகின்றது.

(33) வீரஹத்தி விநாயகர் :

இவர். வேதாரண்யம் என வழங்கும் **திருமறைக்காடு** என்னும் தலத்துக் கோயிலின் வெளிப்பிராகாரத்தின் மேற்பால் மேற்கு நோக்கி வீற்றிருக்கின்றார். இராவணனைக் கொன்ற பிரமஹத்தி தோஷம் நீங்க, இராமபிரான் இராமேசுவரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டார், எனினும் அவரை விடாது எஞ்சிநின்று தொடர்ந்து வந்த வீரஹத்தியைத் தீர்த்தருளிய காரணத்தால், இவருக்கு இப்பெயர் அமைந்தது என்பது தலபுராணம்.

(34) வீணை ஏந்தும் விநாயகர் :

இவர் **பவானி** என இந்நாளில் வழங்கும் **திருநணு** என்னும் தலத்தில் உள்ள விநாயகர், இவர்தம் சிற்பத் திருவுருவம் மிகவும் அழகும் சிறப்பும் வாய்ந்தது.

(35) வெயிலுவந்த விநாயகர் :

இவர் மாணிக்கவாசகரைச் சிவபிரான் ஆட்கொண்டருளிய புனிததலம் ஆகிய திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ளார். இவர் தம் கோயிலுக்கு மேற்கூரை இல்லா திருத்தல் காணலாம். சூரிய ஒளி உடல்மேற் படுதலால் பல் நலன்கள் விளைவதை, இப்பெருமான் நமக்கு விளக்கிக் காட்டுகின்றார் போலும்! இவ்வெயிலுவந்த விநாயகரை, மகாவித்துவான் **மீனாட்சி சுந்தரம் பிள்ளை** அவர்கள், "இவர் வெயிலை மட்டுமா உவந்தருள்கின்றார்? நிலவையும் கூட உவந்தன்றோ, தம்முடைய திருமுடியிற் சந்திரனை அணிந்திருக்கின்றார்" என்னும் கருத்தமைய **"நிலவுவந்தமுடியினொடு வெயிலு வந்த மதகளிற்றை நினைந்து வாழ்வாம்"** என்னும் வரியை ஈற்றடியாக அமைத்து, அதற்கேற்ப முதல் மூன்றுவரிகளில், "சந்திரன் உமாதேவியாருக்குரிய இடப் பாகத்துக் கண்ணுதலாலும், சூரியன் சிவபிரானுக்குரிய வலப்பாகத்துக் கண்ணுதலாலும், மைந்தராகிய தம்மைத் தாய் தந்தையர்களாகி அவர்கள் அன்புடன் நோக்கிப் பரிவு காட்டுதல் இயல்பாதலாலும், விநாயகர் நிலவையும் வெயிலையும் ஒருங்கே உவந்து ஏற்றுக் கொள்ளுகின்றார்" என வித்தகம் தோன்றக் கற்பனை அமைத்துச் செய்யுளை, இவ்விநாயகப் பெருமான் மேல் திருப்பெருந்துறைப் புராணத்திற் பாடியுள்ளார் :

முடிவுரை :

இன்னோரன்ன சிறப்பான விநாயக மூர்த்தங்கள், மேலும் பற்பல ஆங்காங்கே பல தலங்களில் இருக்கின்றன. முற்றாக இல்லாமல், அவைகளுள் ஒரு சில மட்டுமே ஈண்டுக் குறிப்பிடப் பெற்றன. **(Only illustrative, not an exhaustive list)** இவற்றால் விநாயகரின் மாட்சிமை இனைத்தென ஓரளவேனும் உணர்ந்து கொண்டு, நாம் அனைவரும் அவரைத் தொழுது நலம்பெற முற்படுவோமாக!

— ஆசிரியர்

கோயில் சிற்பங்களில் சில அபூர்வ விலங்குகள்

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L., கோவை.

நமது கோயில் தூண்களில் சில அபூர்வ விலங்குகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன, இவ்விலங்குகள் தற்காலம் இருப்பதாகத் தெரியவில்லை. கிரீக்கு, ரோமன், ஈஜிப்ட் தேசங்களில் உள்ள சிற்பங்களில் சில அபூர்வ விலங்குகளைக் காண்கிறோம். அது போலவே அமெரிக்காவில் பெரு, மெக்ஸிகோ நாடுகளில் பண்டைய சிற்பங்களில் சில அபூர்வ ஜந்துக்களைக் காணலாம். மனிதனுடைய மனக்கோட்டைகளில் இந்த விலங்குகள் தோன்றியிருக்கலாமே தவிர, உண்மையில் இருந்திருக்க முடியாது என்பது தற்கால அறிவாளிகளின் கருத்து. நமது நாட்டு அபூர்வ விலங்குகளைப் பற்றிச் சிறிது கூறலாம்.

நமது கோயில்களில் வேட்டைக் காட்சிகள் நிரம்ப உண்டு. அவைகளில் ஒரு அரசன் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு ஒரு புலியைக் குத்துகிற பாவனையில் செய்யப்பட்டிருக்கும். அவ்வரசனோடு சில போர் வீரர்களும் ஆயுதங்களை எடுத்துச் செல்வார்கள். கோவைக்கடுத்த பேரூர்ப் பட்டீசர் கோயிலில் கனக சபையில் உள்ள பெருந் தூண்களில் இக் காட்சிகள் வெகு நுட்பமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மற்ற மிருகங்களில் யானை, குதிரை, மான் முதலியவைகளைக் காணலாம். அரசர்கள் குதிரைகளின் மீது ஏறிச் சென்றால் தேவகணங்கள் யாளிகளின் மீது ஏறிச் செல்வதைக் காண்கிறோம். யாளி என்பது சிங்க உடலும், யானைத் தலையும் கொண்டது. அது யானையைக் கொல்லக் கூடிய சக்தி வாய்ந்தது. யாளிகளைப் பல கோயில் தூண்களில் காணலாம்.

இனி சரபம் என்பது மற்றொரு அதிசய உருவம். சிங்க உருவமும் பட்சிகளின் இறக்கைகளும் கொண்டது. அது சிங்கங்களையும் கொல்லக் கூடிய ஆற்றல் வாய்ந்தது. திருமால் நரசிங்க அவதாரம் எடுத்த போது மிகக் கோரமாக உலகத்தையே அழிக்கும் தன்மை கொண்டிருந்ததால் சிவபெருமான் சரப மூர்த்தியாகத் தோன்றி அந்த நரசிங்கத்தை அடக்கினதாகப் புராணம் கூறும். இந்தச் சரப மூர்த்தி தான் தஞ்சை வட்டத்தில் திரிபுவனம் கோயிலில் உள்ளது. இக் கோயிலில் உள்ள உற்சவ மூர்த்தி இங்கு விசித்திரமாக ஆக்கப்பட்டு உள்ளது. புராணக் கதையை ஒட்டி இந்த விசித்திர உருவம் சித்திரிக்கப் பெற்றிருக்கிறது. இக் கோயில் சோழர் காலத்துத் திருப்பணியாகும்.

பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற தலமாகிய திருவாடானை என்ற ஊர்க் கோயிலில் அவ்வூர்ப் புராண கதையின்

படி ஒரு முனிவர் பெற்ற சாபத்தின் படி தலை ஆடாகவும் உடல் யானையாகவும் தோன்ற யானையின் பசியை ஆட்டின் வாயால் தின்று தீர்க்கமுடியாத வருத் தத்தை அவ்வூர் இறைவனை வழிபட்ட தனுல் சாப விமோசனம் அடைந்ததாக அறிகிறோம்.

அங்கே இருக்கும் முனிவன் ஆட்டுத் தலையும் யானை உடலும் கொண்டிருக்க ஒரு சிற்பம் தீட்டப்பட்டிருக்கிறது. இப் படிப்பட்ட உருவம் வேறெங்கும் கிடை யாது. புராணக்கதை அறிந்து சிற்பி வடிவமைத்திருக்கிருன். இதைப்போல் ஐதீகங்கள் பல உண்டு, ஒரு முதலை ஒரு பிள்ளையை உமிழும் நிலையில் கொங்கு நாட்டு அவிநாசிக் கோயிலில் இருக்கக் காண்கிறோம்.

பாண்டிய நாட்டுப் பெருங் கோயில் களில் எல்லாம் தூண்களில் நர மிருகங் கள் அமைத்திருக்கக் காண்கிறோம். இவைகளைப் பற்றிப் புராண கதைகள் என்ன சொல்லுகின்றன என்று அறிய முடியவில்லை. மதுரைப் பெருங் கோயி லில் இவ்வுருவங்கள் மிகமிகக் கோர ரூபத் தில் செய்யப்பட்டிருக்கின்றன. உடல் சிங்க உருவம். அது இரண்டு கால்களில் நிற்கும் பாவனை, கைகள் மானுடக் கைகள், கையில் பெரிய தண்டாயுதம் ஓங்கி அடிக்கும் பாவனை, தலை ரிஷித் தலை, கண்கள் கோபாக்கினி கொண்டவை. இந்த நிலையில் நர மிருகம் அல்லது புருஷா மிருகம் செய்யப்பட்டிருக்கிறது. இப் படிப்பட்ட உருவம் நெல்லை, ஆழ்வார் திருநகரி முதலிய ஊர்க்கோயில்களில் இருக்கின்றன. மதுரை உருவங்கள் மிகச் சிறந்த வேலைப்பாடு கொண்டவை.

கோவைக்கடுத்த பேரூர்ப் பட்டீசர் கோயிலில் முன் மண்டபத்தில் கட்டப் பட்ட பழைய தூண்களில் பல இராமா யணக் காட்சிகள் சித்திரிக்கப்பட்டிருக் கின்றன. அவைகளில் ஒன்று அனுமான் கடல் தாவும் போது சிங்கிகை என்ற அரக்கி அனுமானை விழுங்கிவிட அனுமான் அவள் வயிற்றைக்கிறி வெளி வந்த காட்சி ஆகும். அதன் விவரம் இது வரை பல மக்களுக்குத் தெரியவில்லை. கோயில் அதிகாரிகளுக்கே தெரியவில்லை. வட மொழி இராமாயணத்தில் மட்டும் உண்டு. இதைச் சித்திரித்த சிற்பி வட மொழி இராமாயணத்தைப் பின் பற்றி இயற்றி யிருக்க வேண்டும். சிங்கிகை ஒரு மகர வடிவில் இருந்தாளாம். இந்தச் சிற்பம் வெகு சிறப்பாகச் செதுக்கப்பட்டிருக் கிறது.

பாண்டிய நாட்டு நெல்லையில், நெல்லை யப்பர் கோயிலில் ஆயிரக்கால் மண்டபத் தில் பல அரிய சிற்பங்கள் இருக்கின்றன. பண்டைய தமிழர் இசைக் கருவிகள் இத் தூண்களில் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். தேவ சாதிகளில் கின்னரர் என்ற ஒரு வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தலை மானுடமும் உடல் பறவை யுமாகக் கொண்டிருப்பர். கின்னரம் என்ற இசைக்கருவியை ஏந்திக்கொண்டு எப்போ தும் பாடிக் கொண்டே இருப்பார்கள். காலம் முழுதும் மகிழ்ச்சியிலேயே கழிப் பார்கள். கிம் + நர என்று அப் பெயர் பிரிக்கப்பட்டு இது நரனு? என்று கேட் கப்படும் முறையில் உறுப்புக்கள் அமைந் திருக்கின்றன. 'மனிதனல்ல, பிறிது,' என்ற பொருளில் இப் பெயர் ஏற்பட்டி ருக்கலாம்.

மேலும் பாண்டிய நாட்டில் ஆழ்வார் திருநகரியில் திருவேங்கடத்தான் கோயில் என்ற ஒரு வைணவ நிலையம் தெற்குத் தெருவில் இருக்கிறது. அக்கோயிலின் முகத்துவாரத்தில் ஒரு முகப்புக்கல் தோரணக்கல் ஆக வைத்திருக்கிறார்கள். அக்கற் பலகையில் ஒரு விசித்திர உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அதன் உடல் மயில்போன்ற தோகை உடைய பறவை, தலை மானுட வடிவம். இதனைக் **கிம்புருடர்** என்கிறார்கள். உருவம் வெகு அழகாக இருக்கிறது. **கிம் + புருஷ : =** புருஷனு என்ற பொருளில் இச்சொல் வந்திருக்கிறது. இதன் கையில் ஒரு யாழ் வாசிக்கும் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இசைத் தேவர்களில் இதுவும் ஒன்று.

இனி நவக்கிரகங்களில் **இராகு கேது** என்பவைகள் பாம்பு வடிவில் இரண்டு கூறுகள் உண்டு. முனிவர்களில் தில்லையில் **பதஞ்சலி வியாக்கிரபாதர்** என்போர் பாம்பின் பாதமும், புலியின் காலும் கொண்ட உருவங்களை உடையவர்கள். அதே புராண மயத்தில் பேரூரில் **கோமுனி பட்டிமுனி** என்ற இரு முனிவர்கள் கனக சபையில் தொழும் பாவனையில் இருக்கின்றனர். அம்முனிவர்களில் கோமுனியின் தலை மாட்டின் வடிவம் கொண்டது. தும்புரு நாரதர் என்ற தேவலோக இசை வல்லுநர்களில் **தும்புரு** குதிரைத் தலை கொண்டவர். ஹயக்கிரீவ மூர்த்தியும் குதிரைத்தலையில் உள்ளவரே. இந்தத் திருவடிவங்கள் எல்லாம் தெய்வீகப் பிறவிகள் என்பர். கோயில்களில் இவ்வுருவங்களைக் காணலாம்.

சிற்பச் செல்வங்களில் தென்னிந்திய ஆலயங்கள் உலகத்திலேயே சிறந்தவை. இறைவன் எழுந்தருளியிருக்கும் புனித இல்லங்கள் அழகிலும் சிறந்திருக்க வேண்டும் என்பது நமது முன்னோர்களின் ஆழ்ந்த கொள்கை. ஆகவே எந்தக் கோயிலைப் பார்த்தாலும் ஏதாவது ஒரு அழகான சிற்பம் வைத்துச் சிறப்பிப்பார்கள். பொதுவாக எல்லாக் கோயில்களிலும் முக்கியமான சிற்பங்கள் ஒரே தன்மையனவாக இருக்கும். இறைவன், இறைவி, பரிவார தேவதைகள், முதலியவர்களைப் பற்றிப் புராணக் கதைகளில் வரும் செயல்களை முன்னிட்டுச் சிற்பங்கள் செய்யப்பட்டுள்ளன. சைவ வைணவ கோயில்களில் காணும் திருவடிவங்கள் எல்லாம் மாறுபாடுகள் மிக இன்றி ஒரே தன்மையாக இருக்கக் காணலாம். சில சிற்பிகள் சில மாறுபாடுகளைத் தம் அறிவுக்குத் தக்கபடி மாற்றியும் உள்ளார்கள். இதனைச் சிறிது ஆராய்வோம்.

ஆலயங்களில் மூலத்தானம், மண்டபங்கள், தூண்கள், முகடுகள், கோபுரங்கள் முதலிய இடங்களில் சிற்பங்கள் இருக்கக் காணலாம். மூலத்தானங்களில் கற்சிலைகளும், தூண்கள், முகடுகள், விட்டங்கள் முதலியவைகளில் கல்லில் செதுக்கிய வகைகளும், கோபுரம், விமானம் முதலியவைகளில் சுதையிலும், சிற்பங்கள் செய்யப்பட்டிருக்கும். உற்சவங்களில் வெண்கல உருவங்கள் பயன்படுகின்றன. இந்த வகைகளில் தோன்றும் திருவுருவங்கள் பொதுவாக ஒரே வகையினவாகக் காணப்படும். ஆகமங்களில் இவ்வுருவங்களுக்கு விதிகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. சிற்பி அவ்விதிகளை நன்கு ஆராய்ந்து

தன் அறிவைப் புகுத்தி அழகாக அமைப்பான். தல ஐதீகங்களையும் பரம்பரைச் செய்திகளையும் அனுசரித்துச் சிற்சில மாறுபாடுகள் அமைப்பான். இந்த வகையில் சிற்ப விசேடங்கள் நாட்டில் தோன்றியிருக்கின்றன.

சிவாலயங்களில் மூலத்தானங்களில் அருவுருவமாகிய இலிங்கமும், பரிவாரக் கோயில்களில் அந்தந்தப் பரிவார உருவங்களும் காண்கிறோம். வைணவாலயங்களில் மூலத்தானத்தில் பெருமாள் உருவங்களும் பரிவாரங்களில் மற்ற உருவங்களும் காண்கிறோம். மேலும் நவக்கிரகங்களும் நாயன்மார் உருவங்களும் சிவாலயங்களிலும், அவதார உருவங்களும் ஆழ்வாராதியர் உருவங்களும் வைணவாலயங்களிலும் காண்கிறோம். தூண்களிலும் விட்டங்களிலும் திண்ணையடிகளிலும் மண்டல மூலைகளிலும் ஏனைய பல வடிவங்களும் காணப்படுகின்றன. சில ஆலயங்களில் இயக்கர், கின்னரர், கிம்புருடர், முனிவர் முதலியவர்களின் வடிவங்களும் பல விசித்திர வடிவங்களும் காணலாம். இவைகள் எல்லாம் சிற்பிகளின் யுக்திக்குத் தக்கபடி சித்திரிக்கப் பெற்றிருக்கும். சில தலங்களில் தனி உருவங்கள் செதுக்கியிருக்கவும் காணலாம்.

சிவாலயங்களில் மூலத்தானங்களில் அருவுருவமான லிங்க வடிவங்களே இருக்கின்றன. சிவபெருமானுக்கு 25 திருமூர்த்தங்கள் இருந்தபோதிலும் அவைகள் எல்லாம் பெரும்பாலும் மண்டபத்தூண்களிலேயே காணலாம். ஆனால் வைணவாலயங்களில் மூலத்தானங்களில் அர்ச்சா வடிவங்களே உண்டு. திருமால் அன்பர்களைக் காக்கும் பொருட்டு எடுத்த பல வித அவதார வடிவங்களும் அங்கே காணலாம். இவைகள் ஒவ்வொன்றிலும் தலங்களுக்கு ஏற்ற வடிவங்கள் அமைந்திருக்கின்றன. ஆகவே வேறுபாடுகள் இருப்பது இயற்கை. சிவாலய மூலத்தானங்கள் உருவத்தில் பெரிதும் சிறிதும் ஆக இருக்குமேயன்றி வடிவங்கள் மாறுபட நியாயம் இல்லை. இலிங்காகாரத்தைத் தவிர வேறு வடிவங்கள் காணமாட்டோம்.

தமிழ் நாட்டில் பாடல் பெற்ற தலங்களில் திருச்செங்கோட்டைத் தவிர மற்ற எல்லாத் தலங்களிலும் இலிங்கமே மூலத்தானத்தில் இருக்கின்றது. திருச்செங்கோட்டு மலை மீது உள்ள கோயிலில் மட்டும் மாதொரு பாகம் அதாவது அர்த்தநாரீசுர வடிவமான திருவடிவம் இருக்கின்றது. இடது புறம் பெண் வடிவமும், வலது புறம் ஆண் வடிவமும் கொண்ட அர்த்தநாரி வடிவம் காட்சி தருகிறது. புராணமும் அவ்வடிவையே கூறுகிறது. பெண் வடிவம் பெண்ணுக்குரிய உறுப்புக்களும் அணிகளும் இடப்பாதியிலும், ஆண் வடிவம் ஆணுக்குரிய உறுப்புக்களும் அணிகளும் வலப் பாதியிலும் இருக்கக் காண்கிறோம். தலத் தேவாரங்களில் அர்த்தநாரீசன் என்ற பெயர் காணுவிடினும், தல மஞ்சரிகளில் அப்பெயரையே காண்கிறோம். மற்ற தலங்களில் மாதொரு பாகம் ஆகிய வடிவங்கள் தூண்களில் மட்டும் காணலாம். மூலத்தானங்களில் இல்லை.

'மாதிருக்கும் பாதியன்' என்பதற்கு அடையாளமாகச் சிவபெருமான் இடது காதில் தோடு என்ற பெண்கள் காதணியும், வலது காதில் குழை என்ற ஆண்கள் காதணியும் அணிந்திருக்கக் காண்கிறோம்.

அதனுல் 'தோடுடைய செவியன்' என்று சம்பந்தர் பாடியதும் அறியலாம். இதற்கொரு புராண சரிதமும் உண்டு. பிருங்கி முனிவர் ஆழ்ந்த சிவபக்தி உடையவர். உமையம்மையைத் தொழுவதே இல்லை. உமையுடன் சிவன் அமர்ந்திருக்கையில் வண்டு வடிவமாக அம்முனிவர் சிவனையே வலம் வந்தாராம். அதுகண்டு அதனை விலக்கிட எண்ணி உமையம்மை பெருமானை வணங்கி அவருடைய உடலில் பாதி தனக்குத் தரும்படி வேண்ட இறைவன் அப்படியே தந்தருளினுனும். இதனுல் பெருமானுடைய இடப் பகுதி உமையின் உருவமாயிற்று. இச்சரிதப்படி அர்த்த நாரீசுவர வடிவம் தோன்றிற்றும், திருச்செங்கோட்டு இறைவன் வடிவம் இந்த வகையில் தனிப்பெருமையோடு ஏற்பட்டதாம்.

எல்லாச் சிவாலயங்களிலும் அர்த்தநாரீசுவரர் வடிவம் இடது புறத்தில் உமையொருபாகமாக இருக்க, ஒரு கோயிலில் மட்டும் வலது புறத்தில் உமையம்மை இருக்கக் காண்கிறேம். தஞ்சையில் கரந்தைக்கருகில் உள்ள வசிஷ்டேசர் சந்நிதியில் உள்ள அர்த்தநாரீசர் வடிவம் மிக விசித்திரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. வலது புறம் பெண் வடிவமும் இடது புறம் ஆண்வடிவமும் அமைந்துள்ளது. உறுப்புக்களும் அணிகளும் அந்த வேறுபாட்டினைக் காட்டுகின்றன. இந்தக் கோயில் முதலாம் இராஜராஜசோழனுக்கு முன்காலத்தில் (கி. பி. 985—1014) ஏற்பட்ட பண்டைச் சோழர் திருப்பணியாகும். ஏனெனில் இதில் ஒரு கல்வெட்டு பராந்தகச் சோழன் செய்த தானங்களைக் குறிக்கின்றது. அக்காலத்தில் வலப்பாகம் பெற்ற ஐதீகமும் வழங்கியிருக்கலாம் அல்லது சிற்பி தன் அறிவுக்குத் தக்கபடி இந்தத் திருவுருவத்தை ஆக்கியிருக்கலாம். வேறென்ன காரணம் கூறமுடியுமோ!

இனி திருமால் அவதாரங்களில் வராக நரசிம்ம அவதாரங்கள் மிகப் பிரசித்தி பெற்றவை. அவைகள் பல்லவர்கள் காலம் முதற் கொண்டு நம்முடைய கோயில்களில் இடம் பெற்றுள்ளன. 6, 7 நூற்றுண்டுகளில் குடையப் பெற்ற பல்லவர் குகை மண்டபங்களில் பாறைச் சுவர்களில் இவ்விரு அவதாரங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. பின்னுல் ஏற்பட்ட சோழர் பாண்டியர் கோயில்களிலும் இவ்வவதார உருவங்கள் அமைந்திருக்கின்றன. மூலத்தானங்களில் மட்டுமல்ல, தூண்களிலும் கருவறைகளைச் சுற்றிலுமுள்ள சிற்றறைகளிலும் பரிவார தேவதைகளாக இவைகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. பெரும்பான்மையாக அவைகளின் தலை வராகம் சிங்கம் என்ற உருவமாகவும், உடல் மானுடவுருவமாகவும் இருக்கக் காணலாம். நரசிங்க உருவம், வீற்றிருக்கும் நிலையில் இரணியனை மடியில் இருத்திக் குடலைக் கிழிக்கும் செயலில் இருக்கின்றது.

இவ்வுருவங்கள் எல்லாம் ஆண்பால் உருவங்களே. மிகக் கோரமான இயல்பில் அவைகள் காட்சி தரும். ஆனுல் ஒரு கோயிலில் மட்டும் பெண்பால் நரசிங்கம் காணப்படுகிறது. இதன் ஐதீகம் பல முறை விசாரித்தும் தெரியவில்லை. விருத்தாசலம் அம்மன் கோயிலில் வலம் வரும்போது அம்மனுக்கு இடது பக்கத்தில் இருட்டான மூலையில் அவ்வுருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. அத்திருவுருவத்தின் உடல் பெண்பால், தலை சிங்கம்.

நிற்கிற பாவனையில் அது இருக்கிறது. மார்பில் இரண்டுதனங்கள் சிறந்து விளங்குகின்றன. பரிவார தேவதைகளில் இந்தப் பெண்பால் நரசிங்கம் ஏன் வைக்கப்பட்டு உள்ளதோ அறியோம். இவ்வுருவம் காளி முதலிய பெண் தேவதைகள் அமைக்கப்படும் மூலைகளில் உள்ளது. இறைவிக்கு எத்தேவதையானாலும் பெண் தேவதையே பரிவார தேவதையாக இருக்க வேண்டும் என்ற காரணத்தால், இப்படி பெண்பால் நரசிங்கம் கருதப்பட்டிருக்கலாம்.

நமது கோயில்களில் மூத்த பிள்ளையார் திருவுருவங்கள் எங்கும் காணலாம். அப்பிள்ளையார் உருவங்கள் பலவகையாகச் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன. மூலை முடுக்குகளில் எல்லாம் பிள்ளையார்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஏனெனில் முதன் முதலில் பிள்ளையாரை வழிபட்டு விட்டுத்தான் வேறு வழிபாடோ செயலோ செய்யவேண்டும் அல்லவா? அப்பிள்ளையார்கள் பொதுவாக வீற்றிருக்கும் நிலை தலை யானை முகமாகவும், தும்பிக்கை முன்னால் வளைந்து கொண்டும் நான்கு கைகளைப் பெற்றும், தொந்தி சரீரத்தோடு அமர்ந்தும், அவ்வுருவங்கள் காட்சி தரும். இப்பிள்ளையார் சிவபெருமானின் மூத்த பிள்ளையாகையாலும், எல்லாத் தடைகளையும் நீக்கும் கருணைக் குணம் உள்ளவராகையாலும் மக்களிடை மிகவும் அன்போடு போற்றப்படுகின்றார்.

மேலும் பிள்ளையார் என்றாலே ஆண்பால் என்ற நினைவு நம்மை விட்டு அகலாது. ஆனால் ஒரு சிற்பி மட்டும் பிள்ளையார் திருவுருவத்தைப் பெண்பாலாகச் சித்திரிக்கிறார். கன்னியாகுமரி வட்டத்தில் **சுசீந்திரம்** என்ற புகழ் பெற்ற திருத்தலத்தில் ஒரு தூணில் ஒரு பெண் வடிவத்தில் விநாயக வடிவம் சித்திரிக்கப் பெற்றிருக்கிறது. உடல் பெண் உருவம், தலை விநாயகர் உருவம். அது வீற்றிருக்கும் நிலையில் உள்ளது. இதனை இக் கோயிலில் **விக்கினேசுவரி** என்கிறார்கள். முழு ஐதிகம் தெரியவில்லை. தமிழ் நாட்டில் பெயர்களில் 'விக்கினேசுவரர்' என்று பெயர் இடுவார்கள் இல்லை. ஆனால் மலேயா நாட்டில் தமிழ்ப் பெண்கள் **விக்கினேசுவரி** என்று பெயர் இட்டுக் கொள்கிறார்கள். இந்த வகையில் பெண் வடிவங்கள் விசித்திரமாக நமது கோயில்களில் உள்ளன. *

செய்திச் சுருக்கங்கள்

திருச்சிராப்பள்ளி : மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் மகா வித்வான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நினைவு விழா, திரு. T. M. நாராயணசாமி பிள்ளை, M.A., B.L., அவர்கள் தலைமையில், நமது அற நிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L., அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது. அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தனர். (5-9-64).

திருச்சிராப்பள்ளி : பன்னிரு திருமுறை மன்றம் சார்பில் "திருமுறைத் திருவிழா" சிறப்புற நடந்தது. திரு. கி. வா. ஜ. முதலிய பல அறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

முன்னுரை :

நம் நாட்டில், சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழ்ப் புலமை வானில் மிகவும் ஒளிபரப்பிப் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்களுள், மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் மூவர்! அவர்கள் முறையே மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (1815-1876) வடலூர் வள்ளல் அருட்டிரு இராமலிங்க அடிகளார் (1823-1874) யாழ்ப்பாணநல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் (1822-1879) என்பவர்கள் ஆவர். இம்மூவரையும் 19-ஆம் நூற்றாண்டின் "முப்பெருஞ் சுடர் மணிகள்" என்று கூறுதல் பொருந்தும்.

கவிஞரும் நாடும் :

ஒரு நாட்டின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமாவன பலவற்றுள் அந்நாட்டில் தோன்றும் புலவர் பெருமக்களின் சிறப்பும் ஒன்றாகும். 'இந்தியாவை இழந்தாலும் இழப்போம்; எங்கள் ஷேக்ஸ் பியரை இழக்க ஒருபோதும் ஒருப்படோம்'' என்று தாமஸ்கார்லைல் (Thomas Carlyle) குறிப்பிட்டிருப்பதும், ஈண்டு நாம் நினைக்கத் தகுவது.

''பெருங்கவிஞர் ஹோமர் வாழ்ந்த பண்டைக் கிரேக்க அரசியலுலகம் அழிந்து பட்டதாயினும், அவர்தம் கவிதைகள் இன்றும் உயிர்ப்புடன் உலவி வருகின்றன. உரோம நாட்டின் பழம் பெருஞ்சிறப்பெல்லாம் மறைந்து போயிற்றெனினும், வர்ஜில் என்பவரின் கவிதைகள் இந்நாளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எந்த உஜ்ஜயினி மாநகரம் காளிதாசர் பெருமானால் அணிசெய்யப் பெற்றதோ, அந்த உஜ்ஜயினி மாநகரம், தன் நினைவைக் காளிதாசர் பால் ஒப்படைத்து விட்டு நிலை குலைந்து தளர்ந்தது; ஆனால் காளிதாசர் கண்ட கவிதைக் கற்பனைக் கனவுகள், உயிருடைய ஒருவனின் குரலொலியைப் போல இன்னும் நம்மைக் கவர்ந்து இயக்கி நிற்கின்றன. இடைக் காலப் பெருவேந்தர்கள் பலரும் இறந்து போனார்கள். ஆனால் தாந்தேயின் கவிதைகள் இன்னும் விரும்பிப் பயிலப் பெறுகின்றன. ஷேக்ஸ்பியர் காரணமாக, எலிஸபெத் அரசியாரின் காலம் ஆங்கில மொழி நிலைத்துள்ள அளவும் பாங்குற நினைத்துப் பாராட்டப் பெறும்.[1]

அழியாப் புகழாளர்:

அந்நிலையில் தமிழ்நாடு உள்ள வரையில், தமிழ் நாட்டில் தலங்கள் உள்ள வரையில், அத்தலங்களிற் கோயில்களுள்ளவரையில், தலங்களும் கோயில்களும் பற்றிய இலக்கியங்கள் உள்ள வரையில், அவ்விலக்கியங்களைக் கற்றுச் சுவைத்து மகிழ்ந்து போற்றச் சமயவுணர்வும் தமிழறிவும் உடைய மக்கள் உள்ள வரையில். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளும் அவர்தம் பேரும் புகழும், என்றும் நிலைபெற்று ஓங்குதல் திண்ணம்.

உத்தமக் கவிஞர் :

ஜான் ரஸ்கின் (John Ruskin) என்னும் மேலைநாட்டு அறிஞர் 'உண்மைக் குரலொலி

---

(1) "The political world of **Homer** is dead while his song is living to-day. The splendour of Rome has vanished but the poetry of **Virgil** is yet vital. The dreams of **Kalidasa** still move us like the cry of a living voice, with their poignant sense of tears in human relations, while the Ujjain of which he was the ornament has left her memory to his keeping. The great medieval potentates are forgotten, but the song of **Dante** is still cherished; and the Elezabethan age will be remembered as long as the English language lives on account of its **Shakespeare.**"

—Dr. S. Radhakrishnan, East and West in Religion, p. 129-130

கள்' (Genuine voices) என்றும், 'வெறும் எதிரொலிகள்' (Mere echoes) என்றும், கவிஞர்களை இரு வகையாகப் பிரித்துரைப்பார். அவர்களுள் முதல்வகையினரைச் சேர்ந்தவராய் முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவிஞர், நம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் !

மதிநுட்பம் நூலோடுடையார் :

கற்றவர்கள் எல்லோருமே கவிஞர்களாக ஆகிவிடுவதில்லை; கவிஞர்கள் என்போர் எல்லோருமே கற்றறிந்தவர்களாக இருப்பதில்லை. ஆனால் நம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களோ மில்டன் போல ஆழ்ந்தகன்றோங்கிய அரும்பெருங் கல்வியாளர்! ஷேக்ஸ் பியர் போன்று இயல்பாகவே பாடுந் திறம் பெற்ற இணையற்ற மாபெருங் கவிஞர் ! கல்வி நலமும் கவிதைத்திறமும் இவர்கள்பால் ஒருங்கே சிறப்புறப் பொருந்தியிருந்தன ! அதனாலேயே " மதிநுட்பம் நூலோடுடையார்க்கு அதி நுட்பம் யாவுள? முன் நிற்பவை" என்னும் திருக்குறள் மொழிக்கு ஏற்ப இவர் தமிழுலகில் தமக்கிணை தாமேயாகத் தலைசிறந்து விளங்கினார் !

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் கடலனைய பெருமையை, எம் ஒரு நாவால் அளந்து கூறுதல் ஒல்லுமோ? அவர் தம் அரும் பெரும் நூல்கள் பலவற்றுள் ஒன்றே ஒன்றனை மட்டும், தாலிபுலாக நியாயம் (Specimen) பற்றி ஈண்டுச் சுட்டியுரைத்து அமைதல் சாலும் !

திருமயிலைச் சித்திரச் சத்திரம் :

சென்னை மயிலாப்பூர் யாவரும் அறிந்த சிறப்புடையது. அங்குள்ள கபாலீச்சுரர் கோயிலும், தெப்பத் திருக்குளமும், காண்போர் அனைவரின் கண்ணையும் கருத்தையும் கவரும் கவினுடையன. மயிலாப்பூர் மாடவீதிகள் " மலிவிழா வீதி " எனத் திருஞான சம்பந்தர் குறித்த சிறப்புடையன. அம் மாட வீதிகளுள் ஒன்றாகிய தெற்கு மாட வீதியையும், அதன் கண் அமைந்துள்ள பல அழகிய வளமனைகளையும் பலரும் கண்டிருப்பர். அவற்றுள் ஒன்றாகச் சத்திரம் ஒன்றும் அத்தெற்கு மாடவீதியில் அமைந்துள்ளது. அது " வியாசர்பாடி விநாயக முதலியார் சத்திரம் " எனப்படும். அதுசென்ற நூற்றாண்டில் கட்டப் பெற்றது. கட்டிய போது பல அழகிய சித்திரங்களும், அதன் கண் தீட்டப் பட்டிருந்தமையின் அதனைச் " சித்திரச் சத்திரம் " என மக்கள் சிறப்புறக் குறித்தனர்.

புகழ்ச்சி மாலை :

தெற்கு மாட வீதியில் உள்ள எத்தனையோ கட்டிடங்களுள் ஒன்றாக இன்று காணப்பெறும் இச் சத்திரம் பற்றி, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் புகழ்ந்து பாடியிருக்கின்றார்கள். ஒரு பாடல், இரண்டு பாடல் அன்று. 'புகழ்சசி மாலை' எனப்பெயரிட்டு நூறு பாடல்கள் பாடியிருக்கின்றார்கள். வியாசர் பாடி விநாயக முதலியார் என்பவர் சென்ற நூற்றாண்டில் விளங்கிய சிறந்த பெருஞ் செல்வர்! நம் பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களை, அன்புடன் ஆதரித்து நண்புரிமை பூண்டு ஒழுகியவர். எனவே, தம்நண்பர்கட்டிய சத்திரத்தினைப் பாராட்ட விரும்பி நம் மகாவித்துவான் அவர்கள் " சித்திரச் சத்திரப் புகழ்ச்சி மாலை " என்று 100 பாடல்கள் கொண்ட ஒரு நூலையே இயற்றி விட்டார்கள்.

சாதாரண ஒரு கட்டிடம் ஆகிய சத்திரம் பற்றி 100 பாடல்கள் பாடுவது என்றால், அஃது எளிதில் இயல்வதோ? அவற்றிற்குரிய சொற்பொருட் சுவைகளும் கற்பனை நலங்களும் செய்யுள் அமைப்புத் திறங்களும் எல்லாம் மற்றையோர்க்கு எத்துணை முயன்றாலும் வாய்க்குமோ? விரிப்பிற் பெருகுமாதலின் அப் புகழ்ச்சி மாலையின் ஒரு சில செய்யுட்களின் பொருளை மட்டும் இங்குக் கீழே காண்போம்.

பூமேவு திருமயிலை நகரிற்
　　கற்பகவல்லி புல்ல மேவும்
மாமேவு கபாலீசர் சந்நிதி
　　நற்றிருக்குளத்தின் வயங்கு தென்பால்
தூமேவு புகழ் விநாயக மகிபன்
　　நித்திலவெண் சுதைதீற்றிச் செய்
பாமேவு சத்திரம் அன்னவன் புகழே
　　திரண்டதெனப் பகர லாமே.

சில செய்யுட்களின் செம்பொருள் :

மறையவர்க்குப் பிறப் பொழுக்கமும், துறவியர்க்கு அருளும், இல்லறத்தார்க்கு விருந்தோம்பும் பண்பும், சிவ பூசை செய் பவர்கட்கு மெய்யன்பும் போல, மயிலை நகர்க்கு இணையற்ற சிறப்பை விளைப்பது, விநாயக முதலியார் அமைத்த அழகிய சத்திரம் ஆகும் (2).

இச்சத்திரத்தின் புகழைக் கேட்டு யார் தான் தலையசைத்து வியவாதிருக்க முடியும்? உலகைத்தலையிற் சுமக்கும் ஆதிசேடன் ஒருவன் மட்டுந்தான், ஒரு வேளை இதனை வியந்து தலையசைக்க முடியாது இருக்கக் கூடும் (3).

இச்சத்திரத்தின் சிறப்பைக் கண்டு பிள்ளையாரே கூத்தாடி மகிழ்ந்திருக்கின் றார். அதனால்தான் மயிலையில் ஒரு பிள்ளை யார் 'கூத்தாடும் பிள்ளையார்' எனப் பெயர் பெற்றிருக்கின்றார். அற்றன்று, பிள்ளை யார் பெயர் பெற்றது முன்னும், சத்திரம் கட்டியது பின்னும் ஆயிற்றே எனின், விநாயக முதலியார் என்பவர் எதிர்காலத் தில் ஒரு சத்திரம் அழகிதாகக் கட்டுவார் என்பதனை முன்னரே யுணர்ந்து மகிழ்ந்து, பிள்ளையார் அங்ஙனம் கூத்தாடினார் எனக் கொள்க (4).

விநாயக முதலியார் நல்ல தெருள் (அறிவு) பெற்றார்; அதற்கேற்பப் பொருள் பெற்றார்; அப்பொருளாற் சத்திரங் கட்டி, இறைவன் அருள் பெற்றார்; இவரைப் போல் செய்யாத மற்றைய செலவர்கள் மருள் (அறியாமை) பெற்றார்; சிறுமை பெற்றார்; மற்றும் என்ன பெற்றார்கள்? எனின், வசை (பழிச்சொல்) பெற்றார்கள் என்க (6).

அடைந்தவர்கள் வேண்டிக் கேட்பன எல்லாம் தருதலால் இச் சத்திரம் தேவருல கிலுள்ள ஐந்தருக்களையும் ஒக்கும் என்பர் மக்கள்; யாம் அதனை மறுக்கின்றோம்! அவைகள் கேட்டால் மட்டுமே கொடுக்கும் தன்மையன; இச்சத்திரமோ, நாம் கேளாமலே குறிப்பறிந்து கொடுத்துதவி, நம்மை உபசரிக்கும் தன்மை வாய்ந்தது ஆகும் (7).

இச் சத்திரத்தில் உள்ள அட்டில் சமையலறை) வந்து அடைந்தவர் களின் வாய்க்கு விருந்தூட்டும்; அங்குள்ள சித்திரங்கள் காண்போரின் கண்களுக்கு விருந்தூட்டும் (14).

சூரியன் முன்னே இருள் கழியும்; இறைவன் முன்னே மலம் ஒழியும்; அடி யார்களின் முன்னே பிறவி அகலும்; நல் லோர்களின் முன்னே பொறுமை தோன் றுது; விநாயக முதலியார் முன்னே உலோபம் தலைகாட்டாது; அவருடைய சத்திரத்தின் முன்னே மக்களின் பசி நோய் அகன்றோடி மறையும் (15).

கபாலீசர் உவந்து உறைவதனால் திரு மயிலையைச் சிவலோகம் என்றே கூறுவர்; ஆனால், விநாயக முதலியார் சத்திரத்தில் அமைந்துள்ள பல வசதிகளின் மிகுதி யினால், திருமயிலை போகபூமியும் ஆகும் என்று யாம் கூறுவோம் (16)

கடல் மணலையும், வான்வெளி மீன் களையும், உலகிற் பிறந்து இறந்த ஆண் பெண் மக்களையும் அளவிட்டாலும், விநா யக முதலியார் செய்துள்ள அறங்களையும், இனிச் செய்ய இருக்கும் அறங்கள்பற்றிய எண்ணங்களையும், அளவிட்டுக் கூற நம் மால் இயலாது (19).

விநாயக முதலியார் 'மிகவும் தெரிந்தவர்' என்று அவர்தம் அறிவைப் பலரும் புகழ் வார்கள். தம்முடைய சத்திரத்தின் சுவை மிகுந்த உணவை உண்டு மகிழ்ந்து செல் லும் மக்கள் திரளின் எண்ணிக்கை இத் தனை என்பதனை, அவர் ஒரு சிறிதும் அறிய வல்லவர் அல்லர் ஆதலின், அவ ரை 'ஒன்றும் அறியாதவர்' என்றே யாம் கூறுவோம் (30).

திருமயிலை விநாயக முதலியார் சத்தி ரத்தின் முன்னே அழகிய ஒரு பந்தர் அமைக்கப் பெற்றுள்ளது. அதன் சிறப் பை யாம் என் சொல்வேம்? அப்பந்தரின் கண் அங்கங்கே வாழை கமுகு தெங்கு கரும்பு பனசம் (பனங் குலைகள்) ஆகிய வை அழகுறக் கட்டியிருக்கின்றன. புல வர்கள் பந்தருக்குப் பெயர் "காவணம்" (கா-சோலை; வணம்-மயம்; சோலைகள்போல மரங்கள் நிறைந்தது) என்று கூறுவது, இதனை நினைத்துத்தான் போலும்! (38).

திருமயிலைச் சத்திரத்தின் முன்னே உள்ள காவணத்தைப் பார்த்து, முன்பு

தேவருலகில் தேவேந்திரன் முடிசூட்டு விழாவின் பொருட்டுத் தேவர்கள் அமைத்த சிறப்பு மிக்க அந்தக் காவணம், தகாவணம் ஆயிற்று என்று அறிந்தோர்கள் கூறுவர் (39).

திருமயிலையில் விநாயக முதலியார் அமைத்த சத்திரம், அக்காலம் இருந்திருக்குமாயின், சிவபெருமான் பசித்து வந்த சுந்தரமூர்த்திகள் பொருட்டுத் திருக்கச்சூர் என்னும் தலத்தில் வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்திருக்கமாட்டார் (43).

திருமயிலைச் சத்திரமும், அதன் கண் உள்ள நீர் நிறைந்த கிணறும் அன்று இருந்திருந்தால், மீனாட்சியம்மை திருமணத்தின் போது, குண்டோதரன் பசியும் தாகமும் தீருதற் பொருட்டு, அன்னக்குழியையும் வைகை நதியையும் சோமசுந்தரப் பெருமான் மதுரையில் வரவழைத்தளிக்க முற்பட்டிருக்க மாட்டார் (48).

திருமயிலைச் சத்திரத்தில் உணவு உண்பவர்களுக்கு அருந்தக்கொடுக்கின்ற சுவை மிகுந்த பாலைப் போல, அன்று கொடுப்பவர்கள் இருந்திருந்தால், கண்ணபிரான் பாலுக்கும் தயிருக்கும் கட்டுண்டும் அடியுண்டும் ஆய்பாடியிற் பலவகைகளில் துன்புற்று உழன்றிருக்கமாட்டார். (55).

திருமயிலை விநாயக முதலியார் சத்திரத்திற்குச் சென்று தங்குபவருள், விரதம் இருப்பவர்களுக்காக இனிய சுவை நனியமையச் செய்து கொடுக்கப் பெறும் சிற்றுண்டி, அன்று கிடைத்திருக்குமாயின், மதுரைச் சோமசுந்தரப் பெருமான், வந்தியம்மையின் சிறுபிட்டுக்காக மண்சுமந்தும், பாண்டியன் பிரம்படியாற் புண் சுமந்தும் வருந்தியிருக்க மாட்டார் (56).

திருமயிலை நகரம் ஒரு பெரிய குளம் போலும்; அதன்கண் விநாயக முதலியார் சத்திரம் ஓர் அழகிய தாமரைமலர் போலும்; ஆறு சுவைகளோடு உபசரிப்பவர்களின் அன்பாகிய சுவையும்சேர்ந்து, அங்குக் கிடைக்கும் உணவு தேன்போலும்; அதனை யுண்டு மகிழ்ந்து செல்லும் அளவற்ற மக்களின் திரள், தேனையுண்டு மகிழ்ந்து செல்லும் வண்டுகளின் திரள் போலும்! (60).

திருமயிலைச் சத்திரத்துள் மிக்க பசி கொண்டு நுழையும் போது குண்டோதரன் (குழி விழுந்து ஒடுங்கிய வயிற்றை உடையவன்) போல இருப்பவர்கள், அங்கே சென்று உண்டு திரும்பும்போது கும்போதரன் (யானை போன்று மிகப்பெரிய வயிற்றையுடையவன்) போல ஆகி மகிழ்ந்து செல்வார்கள். (61).

திருமயிலை விநாயக முதலியார் சத்திரம், வெண் சுதை (சுண்ணாம்பு) தீற்றப் பெற்றிருத்தலால், மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த சிவபெருமான் போல விளங்கும்; அங்கு இரண்டு கதவுகள் உடையதாய் அமைந்துள்ள வாயிற்படி, சிவபிரானின் நெற்றிக்கண் போலத் திகழும்; அதன் அருகே அடைபவர்களின் பசி, மன்மதன்போல இல்லாமற் போகும் (69).

விநாயகமுதலியார் திருமயிலையிற் கட்டியசத்திரம் ஆகிய காமதேனு, பல்சுவையடிசில் என்னும் பாலை, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து போதரும் அளவற்ற மக்கள் ஆகிய கன்றுகளுக்கு ஊட்டி வளர்த்துப் பயன்விளைத்து வரும். (70).

திருமயிலைச் சத்திரமும் கடலும் தம்முள் சமம் ஆகும்; எங்ஙனம் எனின், கடல் எத்தனை மேகங்கள் வந்து முகந்தாலும், அவற்றிற்கு நீர் இல்லை எனக் கூறுது; அதுபோல எத்தனை மக்கள் திரண்டு வந்தாலும் இச் சத்திரம் உணவு இல்லை என்று சொல்லாது. (71).

விநாயக முதலியார் ஆகிய திருமால், திருமயிலை ஆகிய சுவேதவட்டம் என்னும் தீவில், அழகுற அமைதத சத்திரம் ஆகிய திருப்பாற்கடலின்கண், செல்வம் ஆகிய ஓஷதிகள் கொண்டு, சுவை மிகச் சமைத்த உணவு ஆகிய புதிய அமிழ்தத்தை, மறையவர்கள் என்னும் கோரிகை (அகப்பை) யினுல், பசியுடன் வரும் விருந்தினர்கள் ஆகிய தேவர்களுக்கு மனநிறைவு உண்டாகுமாறு மகிழ்ந்து ஊட்டுவார் (80).

இச் சத்திரத்தில் உணவு உண்டு, வெற்றிலைப் பாக்கு மென்று, தம் குல மடந்தையருடன் வேதியர்கள் வெளி வந்து உமிழ்கின்ற சிவந்த வெற்றிலைச்சாறு மிகுதிபற்றி, ஒரு கால் நிலமடந்தை (பூமிதேவி)தான் பூப்பு (Menses) அடைந்த

னள்போலும் என்று, பலரும் ஐயங் கொள்ளுவர். (88)

சாற்றருமையைப் புழுங்கும் அறைக் குள் இருப்பவர்களும், கரும்பின் சாற்றருமை யை உவர்ப்பு மிக்க கடல் நீரை அருந்திய வர்களும், விநாயக முதலியார் சத்திரத் தின் சோற்றருமையைப் பிற சத்திரங்களிற் சென்று உண்ண நேர்ந்தவர்களுமே, நன்கு உணர்ந்துகொள்வார்கள். (90).

தாமரையும் முள்ளியும் முண்டகம் என் றும், தங்கமும் இரும்பும் பொன் (Metal) என்றும், நட்சத்திரங்களும் உப்பங்கழி யின் கயல்களும் மீன் என்றும், இடைத் தெரிவுஇன்றி ஒரு சேரப் பொதுவாக வைத்துக்கூறப்படும் வழக்கம் போலவே, விநாயக முதலியார் அமைத்த சத்திரமும் மற்றையோர் கட்டிய சத்திரமும், —சத்திரம் என்று இடைத்தெரிவு இன்றி ஒரே தன்மையில் வைத்துப் பொதுவாகப் பெயர் பெறுகின்றன. எனினும்; மற்றைய சத்திரங்கள் இச் சத்திரத்திற்கு ஒரு போதும் ஈடாகா (91).

மரங்களெல்லாம் கற்பகமரம் ஆக மாட்டா; உலகில் உள்ள புரங்கள் எல் லாம் சிவபுரம் ஆகமாட்டா; எழுத்துக்கள் எல்லாம் அகரம் ஆகமாட்டா; அதுபோல மற்றைய சத்திரங்கள் எல்லாம் இச்சத் திரத்திற்கு இணையாக மாட்டா. (95).

சூரியனைக் கண்டு செந்தாமரைகள் மலரும்; சந்திரனைக் கண்டு செவ்வாம்பல் கள் மலரும்; விநாயக முதலியார் சத் திரத்தைக் கண்டு, பசித்தவர்கள் யாவ ரும் முகமலர்ச்சி கொள்வார்கள். (96.)

விநாயக முதலியார் திருமயிலைச் சத் திரத்தின் தண்ணீர்ப் பந்தர்ச் சிறப்பை, முன்னே பாண்டியன் ஒருவன் படை களுக்காகத் தண்ணீர்ப் பந்தர் வைத்து உதவி புரிந்த மதுரைச் சோமசுந்தரப்பெரு மான் கூட வியந்து பாராட்டுவார் என்றால், அதன் சிறப்பை யாரால் அள விட்டுக் கூற முடியும்? (97).

எளிமையன்று, கடினம்

கட்டுரையோ கவிதைகளோ எழுது வது என்பது எளிதான காரியம் அன்று! மிகவும் கடினமான— இடர்ப்பாடான செயல்களுள் ஒன்று அது! பிறபருப் பொருள்களை நாம் கருவிகள் கொண்டு செய்து உருவாக்குதல் போல, நாம் நம் முயற்சியினால் கருத்துக்களை உருவாக்கு தல் இயலாது ("A man cannot say: 'I will compose poetry'. Even the greatest poet cannot say it" —W. B. Yeats). அவைகள் தாமாகவே நம் உள்ளத்தில் உதித்து உருப் பெறுதல் வேண்டும்! மேலை நாட்டு அறிஞர்கள் பலர், தத்தம் நூல்களில், தாம் கட்டுரையோ கவிதையோ எழுதத் தலைப் பட்டுஅடைந்த பல இன்னல்களையும் அனு பவங்களையும், அடைந்தவாறே பிற்கால மக்களுக்குப் பயன்படும் பொருட்டுக் கிளந்து கூறி மொழிந்திருக்கின்றனர்.

ஏ.ஜி கார்டினர் என்னும் புகழோங்கிய ஆங்கில எழுத்தாளர், தாம் எழுதிய "கடற்கரையிற் கூழாங்கற்கள்" என்னும் நூலின் கட்டுரை ஒன்றில், "எழுதுவது என்பது மட்டுமே கடினம் அன்று! அதற் குரிய பொருளையோ— தலைப்பையோ தேர்ந் தெடுப்பதும்கூட, மிகவும் கடினமான ஒரு செயல்! ஏதேனும் எழுதவிரும்பி முய லும்போதெல்லாம், அதற்குரிய பொருளோ கருத்தோ ஒன்றும் தோன்று மையால், கைந்நகங்களைத் திருத்துவதும், எழுதுகோல்களைக் கூர்மையாக்குவது மாகவே பெரும்பாலும் காலங் கழிகின்றது. இவற்றால் மேலும் மேலும் திகைப்பு உண்டாகின்றதேயன்றிக்கருத்தொன்றும் உதித்திலது" எனக்குறிப்பிடுகின்றார் [2].

கஸ்டாவ் பிளாபர்ட் என்னும் பிரசித்தி பெற்ற பிரெஞ்சு நூலாசிரியர், "ஏதே னும் ஒரு சிறுசொல் தடைப்பட்டுவிட்டால், அதனைக்கண்டுபிடித்தற்காகக் கைகளில் தலையை வைத்துக்கொண்டு, வறண்டு

---

(2) "Now if you are accustomed to writing articles for a living, you will know that sometimes the difficulty is not writing the article, but choosing a subject...I had pared my nails several times with absent-minded industry, and sharpened every pencil I had on me with elaborate care. But the more I pared my nails and the more I sharpened my pencils the more perplexed I grew as to the theme for an article..."

— *A. G. Gardiner*, On writing an Article, in 'Pebbles on the Shore'.

போன நற்பேறற்ற மூளையினின்று அச்சொல்லை வலிந்து கசக்கிப் பிசைந்து முயன்று வருவித்தற்பொருட்டு, ஒரு நாள் முழுவதும் உட்கார்ந்திருக்க நேரும் துன்பம் எத்தகையதென்று நீ அறிய மாட்டாய்! கலைத்துறையிற் கடினமான உழைப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. ஆ! உண்மையிலேயே எழுதுதலால் நேரும் வேதனைகளை யான் நன்குணர்கின்றேன்'' எனத் தம் நெருங்கிய நண்பர் ஆகிய ஜார்ஜ் சேண்ட் என்பவருக்குத் தெரிவிக்கின்றார். [3]

இவரே மற்றொரு சமயம், தமது பிறிதொரு நண்பரும் பெருங்கவிஞரும் ஆகிய லூயிபூயிலெட் என்பவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், "நான் தன்னந்தனியாக ஒரு துறவி போலவும், இறைவனைப் போல அமைதியாகவும், நல்லதொரு வார காலத்தைக் கழித்தேன். இலக்கிய உன்மத்தம் என்னைப் பற்றிக்கொண்டு விட்டமையால், என்னை யானே இழந்து கைதுறந்து போனேன். நடுப்பகலில் அமர்ந்தேன். காலை நான்கு மணிக்குப் படுக்கச்சென்றேன். டாக்னோவுடன் உணவு உண்டேன். 15 முறை புகை பிடித்தேன். இதுவரையில் 8 பக்கங்கள் மட்டுமே எழுதியிருக்கின்றேன்'' எனக் கூறுகின்றார். [4]

ஏ. இ. அவுஸ்மன் என்னும் ஆங்கிலக் கவிஞர் ஒருவர், பின்வருமாறு தம்முடைய அனுபவம் ஒன்றை, எழுதுகின்றார்: "யான் ஒரு சமயம் ஒரு கவிதை எழுத நினைத்துத் தொடங்கினேன். முதல் இரண்டு செய்யுட்களை (Stanzas) ஒருவாறு எழுதி முடித்தேன். மூன்றாவது செய்யுள் ஒன்றை எழுத முயன்றேன். அஃது எளிதில் வருவதாக இல்லை. சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டு, தேநீர் அருந்திய பின்னர்ச் சிறிது இடர்ப்பட்டு அம்மூன்றும் செய்யுளை எழுதி முடித்தேன். கவிதை முடிவதற்கு நான்காவதாக ஒரு செய்யுளும் தேவைப்பட்டது. அதனை எழுத எவ்வளவோ முயன்றுபார்த்தேன். அஃது அறவே வர மறுத்துவிட்டது. எங்ஙனமேனும் எழுதியே தீரவேண்டியிருந்தமையால், அது மிகவும் தொல்லையான வேலையாகவே இருந்தது. அதனையான் 13 முறைகள் திருத்தித் திருத்தித் திரும்பத் திரும்ப எழுதிப்பார்த்தேன். அப்போதும் அது செவ்விதாக அமையவே இல்லை. பின்னர் பன்னிரண்டு மாதங்கள் வரை காத்திருந்து, மிகவும் முயன்றே அதனை முடிக்கவேண்டி நேர்ந்தது. அதற்குப் பின்னர்தான் அஃது ஓரளவு திருத்தமாக அமைவதாயிற்று'' ([5])

இவ்வாறே மிகவும் புகழ்பெற்றவரும், உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப் பெறுபவரும் ஆகிய வில்லியம் வோர்ட்ஸ்வொர்த் என்பவர் (1770-1850), 'குயிலுக்கு' (To the Cuckoo) என்னும் தலைப்பில் தாம் எழுத முற்பட்ட கவிதையில், அக்குயிலின் குரல்பற்றிக் கொடுக்கத் தக்க பொருத்தமான அடைமொழி (Epithet) ஒன்றனைக் காணமாட்டாமல், எத்தனையோ சொற்களை மாற்றி மாற்றித் திருத்தி அமைத்துப் பார்த்தும், அவைகளுள் ஒன்றேனும் செவ்வியதாக அமையாமையால் மன நிறைவு கொள்ளாதவராய்ப் பல ஆண்டுகள் வருந்தி முயன்று வந்தனர். கடைசியாக 43 ஆண்டுகள் கழித்துத் திடீரென ஒருநாள் 'அலைந்து திரியுங் குரல்' (Wandering Voice) என்னும் அடைமொழித் தொடர், அவர் உள்ளத்தில் உதித்தது. அதனையே அக்கவிதையில் அவர் பின்னர்த் திருத்தி யமைத்துப் பதிப்பித்தார் என, அவர்தம் சகோதரியார் ஆகிய டொரத்தி வோர்ட்ஸ்வொர்த் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். [6]

---

(3) "You don't know what it is to stay a whole day with your head in your hands trying to squeeze your unfortunate brain so as to find a word...Hard labour at art is necessary. Ah! I certainly know **the agonies of writing.**"

—Gustave Flaubert to George Sand.

(4) "I have just spent a good week, alone like a hermit, as calm as a god. I got up at midday, abandoned mayself to a frenzy of literature; I went to bed at four in the morning. I dined with Dakno; I smoked fifteen pipes in a day; I have written **only eight pages.**"

—GustaveFlaubert to Louis Bouilhet.

(5) "...A third stanza came with a little coaxing after tea. One more was needed, but it did not come. I had to turn to and compose it myself, and that was a **laborious business.** I wrote it thirteen times, and it was more than **twelve months** before I got it right."

—A. E. Housman.

கலைப்படைப்பும் இடர்ப்பாடும் :

இன்னோரனைய மேலை நாட்டுப் பேரறிஞர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் அனுபவங்களையும் பற்றி, நாம் இனிதறிந்து உணர்ந்து கொண்டு கருதுவோமாயின், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அரும்பெறல் மாட்சிமைகளை யெல்லாம், நாம் செவ்விதில் தெளிந்து உணர்ந்து கொண்டு, மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்து வியந்து நிற்போம் என்பது திண்ணம்.

நம்முடைய கவிஞர் பெருமான் அவர்கள் பாடிய நூல்கள் பற்பல. அவைகள் பலவகைகளாகவும், பல அமைப்புடையன வாகவும் விளங்குகின்றன.

உலா	— 1
தூது	— 1
கலம்பகங்கள்	— 2
பதிகங்கள்	— 3
கோவைகள்	— 3
மாலைகள்	— 6
பிள்ளைத்தமிழ்கள்	— 9
புராணங்கள்	— 16

ஆகிய பற்பல நூல்களை நம் கவிஞர் பெருந்தகை அவர்கள் இயற்றியிருக்கின்றார்கள். இவைகளில் அடங்காமல் விடுபட்டுப்போன மற்றும் எத்துணையோ பலப்பல பாடல்களும், சிறுசிறு நூல்களும் வேறே இருக்கின்றன.

கலைப்படைப்பு என்பது உழைப்பு மிகுதியும், களைப்படைவும், இடர்ப்பாடும் இன்றி யாண்டும் நிகழ்தல் இல்லை. இத்துணை நூல்களையும் இயற்றியக்கால், அவர்கள் எத்துணை இடர்ப்பாடும் துன்பங்களும் அடைந்திருப்பார்கள்? எவ்வளவு முயற்சியும் உழைப்பும் மேற்கொண்டிருப்பார்கள்? என்று கருதியுணர்ந்தால், அவர்களின் கடலனைய பெருமையை நாம் ஒரு சிறிதேனும் உணரப் பெறலாம்! ("He who is not a seer cannot produce a great literature. **Nanrish Kurute Kavyam** .. **Creation implies suffering** for the creator. We who come after, reap the the joy which the poet won for us, by his suffering". —Dr. S. Radhakrishnan.)

முடிவுரை

இத்தகைய சிறந்த வித்தகக் கவிஞர் குரிசில் ஆகிய நம்முடைய மாட்சிமை மிக்க வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளை உணர்ந்து, நாம் அப் பெருந்தகையாரின் நினைவுநாளைச் சிறப்புற ஆண்டு தோறும் தமிழகம் எங்கணும் கொண்டாடி, அவர்தம் அரிய இனிய நூல்களைப் பயின்று பாராட்டிப் போற்றி, நலம்பெற முற்படுவோமாக!

—ஆசிரியர்

---

(6) " Dorothy Wordsworth records in her 'Journal' that her brother **William** had tried to seek an epithet for the Cuckoo, and only after 43 years found himself able to express the sound of the Cuckoo's '**Wandering Voice**''.

—**I. L. Lowes**, Convention and Revolt in Poetry, p. 6.

திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்

ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்,
(சிவராஜயோகமடம், மேலையூர்)

'பிள்ளைத்தமிழ்' என்பது தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்று. 'குழவி மருங்கிற் கிழவதாகும்' எனவரும் தொல்காப்பிய நூற்பா, பிள்ளைத்தமிழ் நூலுக்கு இலக்கணம் வகுத்திருக்கின்றது. பிள்ளை அல்லது குழந்தை போல வைத்துக், குழந்தைகளின் செயலும் இயலும் உடையவர்கள் போலக், கடவுளரையும் அரசர் முதலாயினரையும் சிறப்பித்துக், காப்பு செங்கீரை தால் சப்பாணி முத்தம் வாரானை அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர் என்னும் பத்துப் பருவங்கட்கும் பத்துப் பத்துச் செயயுட்களாக நூறு செய்புட்கள் பாடுவது, 'பிள்ளைத்தமிழ்' எனப்படும்.

'பிள்ளைத்தமிழ்' பல கடவுளர்கள் மீதும், அரசர்கள் முதலிய தலைவர்கள் மீதும் பாடப்பெறுவதாயினும், அதனைப் பாடப் பெறுதற்கு மிகவும் சிறப்பும் பொருத்தமும் உடையவர், திருஞானசம்பந்தப் பெருமான் எனலாம். ஏனெனில், அவர் இளங்குழவி அல்லது இளம் பிள்ளைப் பருவத்தினராகவே விளங்கிய பெருந்தகையாளர்!

திருஞானசம்பந்தரையே தமது உபாசனா மூர்த்தியாகவும் ஞானாசிரியராகவும் கொண்டு போற்றிவரும் மாட்சிமை யுடையவர், திருவெண்காட்டிற்கு அணித்தாக உள்ள மேலையூர்ச் சிவராஜ யோகமடத்தின் அருட்குரவர் ஆகிய ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்! அவர்கள் முன்பே ''திருஞானசம்பந்தர் கலம்பகம்'' என ஒரு நூல் இயற்றி வெளியிட்டருளியிருக்கின்றார்கள். இப்போது அவர்களே ''திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்'' என்னும் இந்நூலையும் இயற்றித் தமிழுலகுக்கு உதவி யருள்கின்றார்கள்!

நூலாசிரியர் ஆகிய சுவாமிகள் மிகச் சிறந்த ஒரு புலவர்; உயர்ந்த இனிய பெருங்கவிஞர். இவர்களின் பூர்வாச்சிரமப் பெயர் முருக- இலக்குவனார் என்பது. தமிழ்ப் பெருஞ் சான்றோர் ஆகிய திரு. வி. க. அவர்கள், 'இவரது நினைவுத்திறம் எனக்கு வியப்பூட்டிற்று. அஷ்டாவ தானம் சபாபதி முதலியார் இவ்விளைஞராய் மீண்டும் உருக்கொண்டனரோ! என்றும் என்மனம் நினைந்தது. இவர் மிக எளிதில் முயற்சியின்றிப் பாட்டெழுதும் வரம் பெற்றிருத்தல், சிறப்பாகக் குறிக்கத்தக்கது. இவருக்கு அடிமையில் வெறுப்பும் உரிமையில் விருப்பும் இயல்பில் அமைந்திருத்தலை யான் பாராட்டுவதுண்டு. சென்னையில் வித்துவான் சங்கம் காண உழைத்தவருள் இவரும் ஒருவர். அச்சங்கத்தின் முதற்செயலாளராக அமர்ந்து தொண்டு ஆற்றியவரும் இவரே'' என இவர்களைப் புகழ்ந்து மொழிந்திருக்கின்றார்கள்!

நல்ல பயன்மிக்க சிறந்த நூல்கள் வெளிவரச் செய்தலில் பெரிதும் ஆர்வமும் ஊக்கமும் உடைய அன்புப் பெருந்தகை ஆகிய நமது அறநிலைய ஆணையர் அவர்கள் விரும்பிப் பணித்தவண்ணம், ''திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ்'' என்னும் இந்நூல், நமது ''திருக்கோயில்'' இதழில் தொடர்ந்து வெளிவரும்.

— ஆசிரியர்.

திருத்தணிகை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில், சென்னை மாநில கவர்னர் திருமிகு. ஜெயசாமராஜ உடையார் அவர்கள் சிறப்பிக்கப் பெறுதல் (9 - 8 - 64).

தஞ்சை மாமணிக் கோயிலில் மஹா கும்பாபிஷேக விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள் (10-9-64)





இந்திய ஜனதிபதி டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், திருத்தணிகையில் அமைக்கப்பட்ட 'இராதாகிருஷ்ணன் நூல் நிலையத்தைப்' பார்வையிட வந்த பொழுது நிகழ்ந்த வரவேற்பு. (12 - 7 - 64)

திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ்

விநாயகர் வணக்கம்

பூமருவும் மென்சிறகர் அலைய அலை வீசுவெம்
புதுமதக் கலுழி பாயும்
பொன்னோடை மால்களிற் றிறையவனை, வார்புனல்
பொன்னிநதி தந்த தேவை,

நாமருவும் மறையெழுதும் ஒற்றைத் தனிக்கோட்டு
நாதனைச், சோதி நயன
நால்வாயின் ஐங்கரக் கணபதியை, இணையடிகள்
நாத்தழும்பத் துதிப்பாம்!

தேமருவு கொன்றையணி செஞ்சடைக் குழகனார்
செங்கண் மால்விடை யேறியோர்
தேவியோடு வந்துசிவ ஞானம் குழைத்தமுது
செய்வித்த சிறும தலையைப்

பாமருவும் இன்னிசைத் தமிழ் அருவி யூற்றெழூஉம்
பவளச்செ ழுங்குன்றினைப்
பரவரிய ஞானனைக் குழவியென யான்பரவு
பைந்தமிழ்க் கவிதழையவே.

[குறிப்புரை : சிறகர் - சிறகுகளையுடைய வண்டுகள், சிறகு-இறக்கை. ஓடை - முகபடாம். பொன்னி நதி - காவிரியாறு. நயனம் - கண். நால்வாய் - தொங்குகின்ற வாய், துதிக்கை. மதலை - குழந்தை. ஞானன் - ஞானசம்பந்தர், ஞானமே வடிவானவர்]

காப்புப் பருவம்

1. சிவபரம் பொருள்

ஐவகைத் தொழிலும் அவ்வவர்க்கு அமைத்தே
ஆற்றியும், அவையெலாங் கடந்து ஆங்கு
அவிரொளிப் பிழம்பாய் அழிவிலா இன்பாய்
அறிவரும் பராபர வெளியாய்,

மெய்வகை விளக்கும் விந்துவின் மேலாய்
விரிசுடர்த் தாணுவாய் இலகும்
விமலமாம் பொருளை, ஞான மேனியனை
விளங்கும்மென் மலர்க்கழல் பணிவாம்!

பொய் வகைச் சமயப் புறஇருள் ஒதுங்கப்
பூதிமெய்ச் சாதனம் பொலியப்
புகலிருள் மலமாம் அகவிருள் இரியப்
புகலியில் வந்தவான் சுடரை,

உய்வகை பரவக் கிடைத்தஒண் பொருளை
உயர்சிவ ஞானநற் கொழுந்தை
உள்குவார் உள்ளக் கமலம்வீற் றிருக்கும்
ஒருவனைக் காத்தருள் என்றே.

2. பராசக்தி

ஆதி பரையாய் ஐவகையாய்
அனந்த வகையாய் அருளாகி,
அமலற் கினிதாம் திருமேனி
யாகிப், பரஞா னமுமாகிக்,

கோதில் ஒளியாய் உயிர்க்குழவி
குளிக்கும் மும்மை மலங்கழுவிக்
கொன்றைச் சடையான் அடிசேர்க்கும்
கோதை மலர்த்தாள் முடிசேர்ப்பாம்!

சோதித் தரளச் சிவிகையொடும்
சுடரார் குடைநற் பந்தர்வரத்
தோணிபு ரம்வந் தெனையாண்ட
தூயோன் அவனைத் தொல்லமணர்

வாதம் அழிக்க வல்லானை
வடிவேற் குமரன் அனையானை
வளர்மெய்ஞ் ஞான சம்பந்த
வள்ளல் தனைக்காத் தருள் என்றே.

[குறிப்புரை : ஆதிபரையாய்-எல்லாவற்றிற்கும் முதல் ஆகிய பராசத்தியாய் ஐவகையாய் - இச்சை ஞானம் கிரியை திரோதம் அநுக்கிரகம் என்னும் ஐந்து சத்திகளாய். அனந்த வகை - அளவு இல்லாத பிரிவு. கோதை - மாலை, ஈண்டு அம்பிகையைக் குறித்தது. தரளம் - முத்து. சிவிகை - பல்லக்கு. தோணிபுரம் - சீர்காழி. வடிவேற் குமரன் அனையான் - அழகாலும் இளமையாலும் அருளாலும் முருகனைப் போன்றவர் சம்பந்தர் என்பது கருத்து.]

3. ஆனந்தக் கூத்தர்

முழுமதி யணிந்தசெஞ் சடையாட ஐந்தொழிலின்
மூவுலகும் ஒன்றியாட
மும்மலமும் நீங்கியோர் ஆனந்த மாக்கடலின்
மூழ்கி யாடக் குனித்தே

தொழுமதி படைத்தமெய் யன்பர் விழி யன்பால்
துளும்புகண் ணீரிலாடத்
தோகை திரு வுளம்ஆட ஆடுமொரு கூத்தனின்
தூமலர்த் தாள் துதிப்பாம்!

அழுமதி படைத்தென்னை யாட்கொண்ட ஞானனை
அருமறைக் காழிவேந்தை
அம்பிகை சுரந்தமுலை யமுதொழுகு செவ்வாயின்
அந்தணர் குலக்குருளையைக்

கழுமலம் எனப்பரவும் முதுபதி தழைப்பவரு
கவுணியர் குலத்தோன்றலைக்
கவுரியற்கு உரைஞான குரவனைப் பரவரும்
கடவுளைக் காக்க என்றே

[குறிப்புரை: ஒன்றி - சேர்ந்து. குனித்து – நடனம் செய்து. தோகை - மயில் போன்ற சிவகாமி அம்மையார். கூத்தனின் – நடராஜப் பெருமானுடைய' அழுமதி படைத்து – 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்றபடி, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அழும் அறிவு உண்டாகும்படி செய்து. குருளை - குட்டி, புலி, சிங்கம் முதலியவற்றின் இளமைப் பெயர். கழுமலம் - சீர்காழி. கவுரியன் – பாண்டியன்.]

4. திருக் கழுமலநாதர்

மூசு வண்டறைய வீசு தென்றலொடு
முருகு நாறுசெங் கமலவாவி சூழ்
முதுபதிப் பெயர்கொள் கழுமலப் பதியின்
முக்கணாளனைச், செக்கர் வார்சடை

மூரிநீர் அலசு தோணி போலுமென
முளையிளங் குழவி மதிதவழ்ந் தலைய
மூவகைப் புவிகொள் ஏழ்பி றப்பிலுழல்
முன்னை வல்வினையின் மன்னுயிர்க்கெனத்

தேசுடைப் பொதுவி லாடு பொற்கழல் கொள்
சிவப ரஞ்சுடரை, உவமையில்லதைச்,
சீர்கொள் வெண்சுடலை நீறணிந் திலகு
செங்கண் மால்விடையொர் பங்கினுளொடும்

திகழ வந்தெனது குருமணிக் கருளிச்
செம்பொன் வள்ளம் ஒன்று அங்கை தந்ததொர்
தேவ தேவனை, மூவர் கோவினைச்
செழுமலர்க் கழல்கள் தொழுது போற்றுவாம்!

வீசு தெண்டிரையின் மோக பந்தியெழ
விரிக டற்புடவி யணுவெனக் கடுகி
வீவி லாதுசுழல் பாழ்ம னக்குகையில்
விமல ஞானமெய்க் கழல்கள் ஆர்த்துயாம்

வேத நாதனருள் ஆர்த ரத் தமிழில்
விரவும் இன்னிசை அலங்கல் தந்தருள்செய்
வேரி யங்கமல மாலை மார்பனை
வெங்குருப் பதியின் எங்கள் நாதனைக்

காசு நல்கிடுதிர் வாசி தீர்த்தெனக்
கடிம லர்ப்பொழிலின் மிழலை யாளி பாற்
கனிவு கொண்டினிய தமிழ்ந வின்றதோர்
கவுணியைத் தமது குலவிளக்கினைக்

கன்னி நாடுடைய மன்னன் நீறணியக்
கருகு சிந்தை அமண் அருகர் வெங்கழுவில்
காதலித்து அமர வாதழித்த அருட்
கடலினைத் தனிபுரக்க என்னவே.

[**குறிப்புரை :** மூசு - மொய்க்கின்ற. அறைய - ஒலிக்க. முருகுநாறு - வாசனை வீசுகின்ற. கமலவாவி - தாமரைக்குளம். முதுபதி - பழைமை மிக்க தலம், நகரம். முக்கணுளன் - சிவபிரான். செக்கர் – சிவந்த. வார் – நீண்ட. மூரிநீர் - கடல். அலசு - அலைக்கின்ற. பொது - தில்லைத் திருச்சிற்றம்பலம். வள்ளம் - கிண்ணம். தெண்திரையின் – தெளிந்த அலைகளைப் போல. பந்தி – வரிசை. புடவி - உலகம். கடுகி - விரைந்து. வீவு இலாது - முடிவு இல்லாமல். ஆர்த்து - பிணித்து, கட்டி. ஆர்தர - பொருந்தும்படி. அலங்கல் – மாலை. வேரி – மணம், தேன். வெங்குருப்பதி - சீர்காழித் தலம். மிழலையாளி - திருவீழிமிழலையில் உள்ள சிவபிரான். "காசு நல்கிடுதிர் வாசி தீர்த்தென...கவுணியை"—சம்பந்தர் திருவீழிமிழலையிற் படிக்காசு பெற்ற அருள் நிகழ்ச்சியைக் குறிப்பது. சமணர்கள் தாமே விரும்பித் தாம் புரிந்த சபதப்படி கழுவில் ஏறினர், சம்பந்தர் அவர்கள் நிகழ்த்திய போலி வாதத்தையே அழித்தனர், சமணர்களை அழித்தொழிக்கச் சம்பந்தர் முற்பட்டிலர் எனச் சம்பந்தரின் கருணை மாட்சியைப் புகழ்ந்து போற்றும் கருத்துடன், "கருகு சிந்தை அமண் அருகர் வெங்கழுவில் காதலித்து அமர, வாது அழித்த அருட்கடல்" என்றார்.]

(தொடரும்)

தேவிகாபுரத்துக் கல்வெட்டுக்கள்

(டாக்டர் மா. இராசமாணிக்கனார், M.A., M.O.L., PH.D.)

தேவிகாபுரம்

தேவிகாபுரம் என்பது வட ஆர்க்காடு மாவட்டத்து ஆரணி வட்டத்து உள்ள சிற்றூர். அவ்வூருக்கு அண்மையில் தனிக் குன்று ஒன்று இருக்கிறது. அதன்மீது சிவன் கோயில் ஒன்று இருக்கின்றது. ஊரில் அம்மன் கோவில் ஒன்று சிறப்புடன் விளங்குகிறது. அது மிகப் பெரிய கோவில்; மிகவுயர்ந்த கோபுரத்தையும் உயர்ந்த மதிற்சுவரையும் உடையது. அம்மன் பெயர் பிரகதாம்பாள் என்பது இது அக்கோவில் கல்வெட்டுக்களில் காணப்படும் அம்மன் பெயரான 'பெரிய நாச்சியார்' என்பதன் வடமொழியாக்கம். சுவாமி பெயர் கனக கிரீசுவரர் என்பது. இப்பெயர் எங்ஙனம் வந்தது என்பது தெரியவில்லை. கல்வெட்டுக்களில் 'திருமலை உடைய நாயனர்' என்பதும் 'திருமலை உடையார்' என்பதும் காணப்படுகின்றன.

கோவில்களின் காலம்

அம்மன் கோவிலில் ஐம்பத்தைந்து கல்வெட்டுக்கள் இருக்கின்றன. சுவாமி கோவிலில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. இவற்றுள் 47 கல்வெட்டுக்கள், அவை வெட்டப்பட்ட காலத்தின் அரசர் பெயரைக் குறிக்கின்றன. பிறவற்றுள் அரசர் பெயர் இல்லை; அவற்றுள் சிலவற்றில் காலமும் இல்லை. இவ்விரு கோவில்களும் நாயன்மார்களால் பாடப் பட்டவையல்ல. அம்மன் கோவிலில் உள்ள கல்வெட்டுக்களில் சோழர் கல்வெட்டு ஒன்றேனும் இல்லை. கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்ற அரசர் அனைவரும் விஜயநகர வேந்தரும் அவர் வழி வந்தவருமேயாவர். ஒரு கல்வெட்டு மகாராஷ்டிரர் கல்வெட்டு; இரண்டு கல்வெட்டுக்கள் இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆரணி ஜாகீர்தார் கல்வெட்டுக்கள். எனவே இக் கோவில்கள் இரண்டும் விசயநகர வேந்தர் காலத்தில் ஏற்பட்டனவாக இருத்தல் வேண்டும் என்று கூறுதல் பொருத்தமாகும்.

விசயநகர வேந்தருள் சாளுவ நரசிங்க உடையார் (கி.பி. 1485-1492) கல்வெட்டுக்களே காலத்தால் முற்பட்டவையாகக் காணப்படுகின்றன. கி. பி. 1630-இல் ஆண்ட வேங்கடதேவ மகாராயர் கல்வெட்டு ஒன்று விசயநகர வேந்தர் வரிசையில் இறுதியாகக் காணப்படுகிறது. அதற்குப் பிறகு சரபோஜி அரசர் மகனுரான துளஜ ராஜா சாகிபு கி. பி. 1889-இன் கல்வெட்டும் ஆரணி ஜாகீர்தார் கல்வெட்டுக்கள் இரண்டும் காணப்படுகின்றன. இவற்றை நோக்க, தேவிகாபுரம் கோவில்கள் ஏறத்தாழ 600 ஆண்டுகளாக இருந்து வருகின்றன என்று கூறுதல் வரலாற்று முறைக்குப் பொருத்தமாகும்.

கல்வெட்டுக்கள்

இக் கோவில்களிலுள்ள ஐம்பத்தாறு கல்வெட்டுக்களிலும் வடமொழிக் கல்வெட்டுக்கள் இரண்டு; மராத்தி மொழியிலுள்ள கல்வெட்டு ஒன்று; ஏனைய 53-ம் தமிழ்க் கல்வெட்டுகளேயாகும். கோவிலுக்குச் சிற்றூர்களையும் நிலங்களையும் தானம் செய்தல் அக்கால வழக்கம். அந்த நிலங்களைக் கோவிலதிகாரிகள் பலருக்குக் குத்தகையாக விடுவது வழக்கம். மேலும் அதிகாரிகள் கோவிலில் வேலை செய்பவர்க்கும் புலவர்க்கும் தமது சொத்தையே கோவிலுக்கு வழங்கியவர்க்கும் நிலங்களும் வீடுகளும் கொடுப்பது உண்டு. கோவில்களில் விளக்குகள் எரிக்கப் பலர் பணம், நெய் முதலியவற்றைத் தானம் செய்வர்; சிலர் திருவிழா நடத்தத் தானம் செய்வர்! சிலர் கோயில் திருப்பணிகள்

செய்வர். பேரரசரும் சில வரிகளைக் கோவிலுக்குத் தானமாக வழங்குவர். கோவிலை அடுத்து மடங்கள் இருப்பது உண்டு. அம்மடத்துத் தலைவர்கள் கோவில் ஆட்சியில் இடம்பெறுவர். இத்தகைய செய்திகளெல்லாம் கோவில் கற்சுவர்களில் வெட்டு விக்கப்படும். இங்ஙனம் வெட்டப் பட்டவையே கல்வெட்டுக்கள் என்று பெயர் பெறும். ஒவ்வொரு கல்வெட்டிலும் அது வெட்டப்படும் காலத்தில் நாட்டை ஆளும் பேரரசன் பெயரும், அவனது ஆட்சியாண்டோ அல்லது எல்லோருக்கும் தெரிந்த சாலிவாகன சகாப்த காலமோ குறிக்கப்பெற்றது. அடுத்து, தானம் செய்பவர் பெயரும் செய்யப்படும் தானமும் அது எதற்காகச் செய்யப்படுவது என்பதும் கல்லில் வெட்டுவிக்கப்படும். அரசனுடைய பல வெற்றிச் செயல்களும் பலவகை விருதுப் பெயர்களும் சில கல்வெட்டுக்களில் இடம் பெறுவதும் உண்டு.

இக் கல்வெட்டுக்களால் என்ன பயன்? கல்லில் வெட்டப்படும் எழுத்துக்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கும். அவற்றைக் காணும் பலர் தாமும் கோவில் திருப்பணிசெய்ய உளம் கொள்வர். நாம் இன்று அவற்றைப் படிப்பதால், அவை தோன்றிய காலத்தில் நாடாண்ட மன்னர்களைப் பற்றிய செய்திகளையும், பொது மக்களைப் பற்றிய விவரங்களையும், அரசியற் செய்திகளையும், கலை, சமயம், நாகரிகம், பண்பாடு பற்றிய செய்திகளையும் அறிகின்றோம். நாட்டு வரலாற்றை அறிவதற்கும் இக்கல்வெட்டுக்கள் பெருந்துணை புரிகின்றன.

அரசர் பெயர்கள்

1. (சாளுவ) நரசிங்கராய உடையார் (கி.பி. 1485—1492)
2. இம்மடி நரசிங்க தேவ மகாராயர் நரச நாயகர் (படைத்தலைவர்) (கி.பி. 1493—1499)
3. (துளுவ) கிருஷ்ணதேவ மகராயர் (இவர் நரச நாயகர் மகனார்) (கி.பி. 1509—1529)
4. அச்சுத தேவ மகாராயர் (இவர் நரச நாயகர் மகனார்) (கி.பி. 1529—1534)
5. சதாசிவ மகாராயர் (கி.பி 1534—1551)
6. சீரங்கதேவ மகாராயர் I (கி.பி. 1572—1589)
7. வேங்கடதேவ மகாராயர் (கி.பி. 1630)
8. துளஜ ராஜா சாகிபு (மராத்திய மன்னர்)
9. ஆரணி ஜாகீர்தார் அபிநவ புராணப் பிரிய சீனிவாச ராவ் சாகேப் (கி.பி. 1889)

நாட்டு ஆட்சி

விசயநகரப் பேரரசர் தென்னிந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டனர். பேரரசர் விசய நகரத்தில் இருந்தார். அவருடைய பிரதிநிதிகளாக மண்டலத் தலைவர் பலர் இருந்தனர். ஒவ்வொரு மண்டலமும் பல சீர்மைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தொண்டை மண்டலத்தில் படைவீட்டுச் சீர்மை என்பது ஒன்று. போளூர் வட்டத்தில் உள்ள படை வீடு என்பது அச்சீர்மையை ஆண்ட அதிகாரியின் தலைநகராகும். அவரது ஆட்சிக்கு உட்பட்ட சீர்மையில் உள்ளதே தேவிகாபுரம் என்னும் திருப்பதி.

படை வீட்டுச் சீர்மையை ஆண்ட அதிகாரிகள் விசயநகர வேந்தரான கன்னடியர் மரபினராகவே இருந்தனர். அவர்களுக்கு 'நாயகர்' என்னும் பட்டமே உரியதாக இருந்தது. சாளுவ நரசிங்கராயரின் காலத்தில் எட்டப்ப நாயகர் என்பவர் படைவீட்டுச் சீர்மையில் உயர் அலுவலராக இருந்தார்.[1] இப்படி நரசிங்கராயர் காலத்தில் கிருஷ்ண தேவராயர் தந்தையான படைத்தலைவர் நரசநாயகர் என்பவரே நாட்டின் ஆட்சியைக் கவனித்து வந்தார். அக்காலத்திலும் கிருஷ்ண தேவராயர் காலத்திலும் முன் கூறப்பெற்ற எட்டப்பநாயகர் மகனான திருமலை நாயகர் படைவீட்டுச் சீர்மையில் உயர் அலுவலராக இருந்தார்.[2] அச்சுதராயர் காலத்தில் மேலே கூறப்பெற்ற திருமலை நாயகர்

---

1 353 of 1912

2. 355, 395, 396 of 1912.

படைவீட்டுச் சீர்மையை ஆண்டார்.[3] இராமையப்ப நாயகர் மகனுரான ஏகாம்பர நாயகர் படைவீட்டுச் சீர்மையை ஆண்டார் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது.4

படைவீடு என்னும் நகரத்தில் கன்னடியப் பெருமக்கள் பலர் அக்காலத்தில் குடியேறியிருந்தனர் என்று இக்கோவில் கல் வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. அவருட் சிலர் இக்கோவில் நிலங்களை உழவுக் காணியாட்சியாகப் பெற்றிருந்தனர். சிலர் இக்கோவிலில் பல அறங்களைச் செய்தனர் என்று பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

பிறர் நலனுக்காகத் தானங்கள்

பேரரசர் நலனுக்காகச் சிற்றரசரும் உயர் அலுவலரும் கோவிலுக்குச் சில அறங்களைச் செய்வது வழக்கம். அவ்வாறே சிற்றரசர் அல்லது சீர்மையை ஆளும் தலைவர் நலனுக்காக உயர் அலுவலரும் பிறரும் கோவிலுக்குச் சில அறங்களைச் செய்வதும் வழக்கமாகும் இவ் வழக்கத்தை இக்கோவிலில் உள்ள 16 கல் வெட்டுக்கள் உணர்த்துகின்றன. நரச நாயகர், கிருஷ்ண தேவராயர், அச்சுத தேவராயர் ஆகிய பேரரசர் நலனுக்காகச் சில தானங்கள் ஏற்பட்டன. படைவீட்டுச் சீர்மையை ஆண்ட திருமலை நாயகர், காளத்தீசுவர நாயகர், ஆகியோர் நலனுக்காகச் சில அறங்கள் ஏற்பட்டன. இங்ஙனமே பல உயர் அலுவலர் நலனுக்காகச் சில அறங்கள் அமைந்தன. 5

நரச நாயகர் நலனுக்காக எட்டப்ப நாயகர் பிள்ளைகளான திருமலை நாயகரும் ஈசுவர நாயகரும் கோவிலில் திருப்பாட்டுப் பாட இருவரை அமர்த்தினர்; அவ்விருவர்க்கும் வீடும் நிலமும் கோவிலில் உணவும் வழங்க ஏற்பாடு செய்தனர். 6 நரச நாயகர் இறந்த நினைவாக முன் கூறப்பெற்ற இருவரும் சமர புங்கவ தீட்சிதர் என்பவருக்கு நிலமும் வீடும் தானம் செய்தனர். 7

---

3. 374 of 1912.
4. 404 of 1912.
5. 355, 357, 360, 361, 363, 364, 376, 377, 381, 383, 391, 399, 401, 403, 404, 358 of 1912.
6. 355 of 1912.
7. 357 of 1912.

தேவதான கிராமங்கள்

தேவிகாபுரம், 'ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து—பல் குன்றக் கோட்டத்து—மேல் குன்ற நாட்டு—முருக மங்கலப் பற்றைச் சேர்ந்த தேவிகாபுரம்' என்பது கல்வெட்டு வாசகம். இங்குள்ள கோவிலுக்குத் தானயாக விடப்பட்ட சிற்றூர்கள் பல. அவை (1) செம்பிய மங்கலம் 8 (2) கயிலாசம் 9, (3) சோரப் பூண்டி 10, (4) காமாட்சி ராவுத்தன் தங்கல், (5) ஊவத்தூர், இதனைச் சேர்ந்த சிற்றூர் தரைப்பாடி என்பது. (6) சிங்கைய ராவுத்தன் தங்கல், (7) சோமாசிபுரம் என்ற மணல் பாக்கம். 12

பிற கிராமங்கள்

கல்வெட்டில் காணப்படும் வேறு கிராமங்களாவன :—

1. முருக மங்கலம்
2. இடைத்துறை
3. திருவிளக்குக்குடி
4. சேற்றுப்பட்டு
5. பிரமணம் பாக்கம்*
6. மாமனம்பாக்கம்
7. கண்ணனூர்
8. ஆற்றுவான்பாடி
9. நடுவிலித்தாங்கல்

கோவில் நிலங்கள்

கோவிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கோவிலதிகாரிகள் கன்னடியர் பலருக்கும் வேறு சிலருக்கும் உழவுக் காணியாட்சியாக வழங்கியதைப் பல கல் வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. 13 கோவிலை மேற்பார்க்க நியமனம் பெற்ற ஒருவருக்கு ஊதியமாகக் கோவில் நிலம் விடப்பட்டது கோவில் ஆட்சியை அதற்கெனத் தேர்ந்தெடுக்கப் பட்டவரும்,

---

8 இ∴து இப்பொழுது 'செம்மிய மங்கலம்' என்று வழங்கப்படுகிறது.'
9
10 இ∴து இப்பொழுது 'சரவப்பூண்டி' என வழங்கப்படுகிறது
11 இ∴து இப்பொழுது 'ஊத்தூர்' என வழங்கப்படுகிறது.
12 355, 357, 365, 367, 368, 372, 373, 396, of1 912.* இதுபிரணம் பாக்கம் என வழங்குகிறது
13 352 354, 367, 369, 372, 375, 387, 389, of 192,

கோவிலை அடுத்து இருந்த பிட்சா மடத் துத் தலைவரும், ஊரில் இருந்த கைக்கோள முதலிகளும், கோவில் குருக்களும் கவ ளித்து வந்தனர்.14 இந்த அதிகாரிகள் ஆற்றுவான்பாடியிலிருந்த வடமலையான் என்ற புலவருக்குச் சோரப்பூண்டி என்ற தேவதான கிராமத்தில் நிலமும் வீடும் வழங்கினர். அரசரிடமிருந்து சோரப் பூண்டி என்னும் சிற்றூரைக் கோவிலுக் குப் பெற்றுத் தந்த அட்டவணை வெங்கப்ப னுக்கு இரண்டு வீடுகளும் நிலமும் வழங் கப்பட்டன.16 அம்மையப்ப நயினுர் என்ப வர் ஊவத்தூரையும் அதனைச் சேர்ந்த குக் கிராமமான தரைப்பாடியையும் கோவி லுக்குத் திருநாமக் காணியாக்கினுர். கோவிலதிகாரிகள் அவருக்கு ஒரு வீட்டை யும் அக்கிராமக் குத்தகையையும் விட் டனர்.17 விழாக்களில் படையலுக்கும் வாசனைப் பொருள்களுக்கும் திருமலை நாயக்கரும் ஈசுவர நாயகரும் முருக மங்க லத்திலிருந்த நிலத்தைத் தானம் செய் தனர்.18 கிருஷ்ணப்ப நாயகர் மகனுன நயினப்ப நாயகர் ஒரு நிலத்திற்கு அருகில் ஒரு குளத்தையும் கிணறுகளையும் தோண்டி அந்நிலத்தை விளைநிலமாக் கினுர்; பின்பு அதைக் கோவிலுக்கு வழங் கினுர்.19

தானங்கள்

கோவிலில் திரு ஆதிரை விழா, திருக் கார்த்திகை விழா, உத்திரத் திருநாள் விழா நடைபெற்றன என்பது தெரி கிறது.20 இந்த விழாக்கள் நடைபெறப் பலர் பணமும் நிலமும் நெய்யும் அளித் தனர். ஆரணி ஜாகீர்தார் மலைமீதுள்ள ஈசர்க்கு அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் செய்தார்.21

அதிகாரிகள் வரிகளைக் கோவிலுக்குத் தானமாக வழங்கினர் என்பதைச் சில கல் வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மல்லப்ப நாயகர் என்ற உயர் அலுவலர் கோவி லுக்கு 33½ பணம் மதிப்புடைய வரியைக் கொடுத்தார்.23 ஒரு தறிக்கு ஓர் ஆண்டுக்கு 1½ பணம் வீதம் தேவிகாபுரத்தில் வசூ லான பட்டடை நூலாயம் கோவிலுக்கு வழங்கப்பட்டது.24

மடங்கள்

தேவிகாபுரத்துச் சிறப்புற்றிருந்த மடம் பிட்சா விருத்தி மடம் அல்லது பிட்சா மடம் என்பது. அது தேவிகாபுரத்தில் செய் யாற்றுக்குத் தென் பக்கம் இருந்தது. 25 அதன் தலைவர்களாக ஈசான சிவாச்சாரி யார், விசுவேசுவர சிவாச்சாரியார் என்ற இருவர் இரு வேறு காலங்களில் இருந் தனர்.26 இவர்கள் கோவில் ஆட்சியில் சிறந்த பங்கெடுத்தனர்.

இராஜ கம்பீரன் மலை

முருக மங்கலத்தை அடுத்த மலைக்கு இராசகம்பீரன் மலை என்பது பழைய பெயர். இராசகம்பீரன் என்பது சோழப் பேரரசருள் வீர ராஜேந்திரனுக்கும் (கி பி. 1064—1069) இரண்டாம் இராசராச னுக்கும்(கி. பி.11461173) விருதுப்பெயராக வழங்கிவந்தது. இவ்விருவருள் வீரராஜேந் திரனே மும்முறை துங்கபத்திரைக் கரை யில் மேலைச்சாளுக்கியரைப் புறங்கண்ட பெருவீரன். அவன் அப்போர்க் காலங் களில் தொண்டை மண்டலத்தைத் தாண்டியே சென்றவன். எனவே அவனது விருதுப் பெயர் அம்மலைக்கு எக் காரணம் பற்றியோ வழங்கலாயிற்று என்று கொள்ளலாம்.

அலுவல்பெயர்கள்

இக்கல் வெட்டுகளில் அலுவலர் சிலருடைய பெயர்கள் காணப்படுகின்றன. கோவிலைக் கண்காணிப்பவர் கோவில் கேள்வி என்று அழைக்கப்பட்டார். அர சருக்கு அருகிலிருந்து தாம் பூலம் கொடுத்தவர் அடைப்பம் என்று பெயர் பெற்றுர். அரசன் அன்றுடம் கவனிக்க வேண்டிய வேலைகளைக் குறித்து வைத்து அரசருக்கு அருகிலேயேயிருந்து நினை வூட்டி வந்த அலுவலர் அட்டவணை என்று பெயர் பெற்றுர். சிற்றரசர் பேரரசைச் சுவாமி என்று குறிப்பதும், பேரரசரையும் சிற்றரசரையும் பிற அலுவலரும் பொது மக்களும் சுவாமி என்று குறிப்பதும் வழக்கம் என்பது இக் கல் வெட்டுகளால் தெரிகிறது.

---

14 354, 356, of 1912.
15 365 of 1912
16 366 of 1112.
17 368 of 1912.
18 359 of 1922
19 388 of 1912
20 860 — 362— 383— 384 of 1912.
22 397 of 1912.
23 868 of 1912.
24 364 of 1912.
25 352 of 1912.
26 352, 389 of 1912.

கீதாஸாரம்

இரண்டாவது அத்தியாயத்தின் ஸாரப்பொருள்

காரப்பங்காடு ஸ்ரீ வெங்கடாசாரிய சுவாமிகள், மயிலாப்பூர்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

1. "ஸ்ரீ பார்த்தஸாரதி இருதாண்களுக்குள்ள வேற்றுமை போன்ற வேற்றுமையைத் திருவுள்ளத்தில் கொண்டு, நான், நீ, இவர்கள் என்று பரமாத்மாவாகிய தன்னையும், ஜீவாத்மாக்களையும் வெவ்வேறு பொருளாக அருளிச் செய்திருக்கிறான். இதற்குத் தக்க சான்று, 'வீடு பேறு பெற்றிருப்பவர் படைக்குங் காலத்தில் உண்டாகின்றனருமல்லர்; ஊழிக்காலத்தில் அழிகின்றனருமல்லர்' என்னுங் கருத்தைக் கொண்டுள்ள "**ஸர்க்கேபி நோப ஜாயந்தே ப்ரளயே நவ்ய தந்திச**" என்னும் அப்பரமன் திருவாக்கேயாம்" என்னும் இவ் உண்மையை மிகச் சுருக்கமாய்க் கண்டோமல்லவா? இதையே தக்க ஆதாரங்களுடன் சிறிது விரிவாய் விளக்கிக் கூறுவோம்.

2. "ஸர்க்கேபி நோப ஜாயந்தே" என்னும் இவ்வாக்கியத்தோடு சேர்ந்த இதின் முன் வாக்கியம், "**இதம் ஜ்ஞாநம் உபாச்ரித்ய மமஸாதர்ம்யம் ஆகதா:**" என்பதாம். இதின் கருத்து;—"என்னால் உபதேசம் செய்யப் பெறப் போகின்ற உண்மை உணர்வைப் பெற்று, அவ்உணர்வுக்கேற்ப நடப்பவர், பரமபுருஷனாகிய என்னோடு ஸாம்யம் பெறுவர்" என்பதாம், பரமபுருஷனோடு ஸாம்யம் பெறுவதாவது - பரம புருஷனுக்குள்ள சிறப்புக்கள் போன்ற சிறப்புக்களைப் பெறுவதாம். இக்கருத்தை நன்கு காண்பாருக்கு, பரமபுருஷனுக்கும் பரிசுத்த ஜீவாத்மாக்களுக்கும் உள்ள வேற்றுமை நன்கு விளங்கும். (மேற் கூறிய முன் வாக்கியத்தில் அமைந்துள்ள) "ஆகதா:" என்னும் சொல்லில் உள்ள பன்மையை நோக்குங்கால், ஜீவாத்மாக்களுக்குள்ள வேற்றுமையும் நன்குபுலனும்.

3. இங்கு, நான்காம் அத்தியாயத்தில் உள்ளதும் பின்குறிக்கப் பெறுவதுமான சுலோகமும் அனுபவிக்கத் தக்கதாகும்:

"**யத் ஜ்ஞாத்வா ந புநர் மோஹம் ஏவம் யாஸ்யஸி பாண்டவ ! யேந பூதாந்ய சேஷேண த்ரக்ஷ்யஸி ஆத்மந் யதோமயி**" (35)

ஸ்ரீ பார்த்தஸாரதி மேற்கூறிய சுலோகத்தினால், ஜீவாத்மாவைக் கண்கூடாகக் காணுதல் என்னும் ஜீவாத்ம ஸாக்ஷாத்காரத்தின் இலக்ஷணத்தை அருளிச் செய்

திருக்கிறுன், இவ் இலக்ஷணத்தைச் சிறிது விவரித்துக் கூறுவோம் :- கை கால் முதலிய உறுப்புக்களோடு கூடிய பிண்டம் உடல் என்று சொல்லப்படும். இவ் உடலில் உயிர் (ஜீவன்) வேறுபட்ட பொருளாகவே இருக்கும். எனினும், உடலையும் உயிரையும் ஒன்றெனப் பலர் எண்ணுகின்றனரல்லவா? இவ் எண்ணமே மோஹம் என்று மேற்கூறிய சுலோகத்தில் கூறப்பெறுகின்றது. இதைத் தேஹாத்மாபிமானம் என்பர். இவ் அபிமானமடியாக 'இவ்வீடு என்னுடையது', 'இவ்விளைநிலம் என்னுடையது', என்னும் எண்ணமும் உண்டாகின்றது. இவ் எண்ணத்தை மமதா ஞானம் என்றும் மோஹம் என்றும் கூறுவர். "இவ் இருவகையான மோஹங்களையும், ஓ அர்ஜுனு! உன் உயிரை நீ கண்கூடாகக் காணுங்கால், நீ அடைய மாட்டாய்", என்கிருன், "**யத் ஜ்ஞாத்வா ந புநர் மோஹம் ஏவம் யாஸ்யஸி பாண்டவ**" என்னும் முன்வாக்கியத்தினுல் ஸ்ரீ பார்த்தஸாரதி - உயிர் உணர்வாகவும், உணர்வுக்கு இருப்பிடமாகவும் இருக்கும் பொருளாம். உடலில் வேற்றுமை காணப்படுகின்றது. ஓர் உடலைப் போன்று வேறொரு உடல் தென்படுகின்றதோ? இல்லையன்றோ? இது போன்று இராது, ஓர் உயிர் எங்ஙனம் உணர்வாகவும் உணர்வுக்கு இருப்பிடமாகவும் இருக்கின்றதோ, அங்ஙனமே ஏனைய உயிர்களும் இருக்கின்றன என்று வேதம் முதலிய நூல்களினுலும், கீதை சாஸ்திரத்தினுலும் நாம் நன்கு அறியலாகும். யுக்திகளினுலும் நாம் (உணர்வாகவும் உணர்வுக்கு இருப்பிடமாகவும் உயிர் உள்ளது என்னும்) உண்மையை உறுதிப்படுத்திக் கொள்ளலாகும். "பரமனும் உணர்வாகவும் உணர்வுக்கு இருப்பிடமாகவும் இருப்பவன்" என வேதம் முதலிய நூல்கள் உணர்த்துகின்றன. இவ்விஷயங்களை உள்ளபடி உணருமவர்க்கு, "உடலைவிட்டு நன்கு விலகிய எல்லா உயிரும் ஒன்றுக்கொன்று ஸமம்; பரமபுருஷனுேடும் ஸமம்" என்னும் உண்மை மிகத் தெளிவாம். இவ் உண்மையையே "**யேந பூதாந்ய சேஷேண**" என்னும் பின்வாக்கியத்தினுல் உணர்த்தியிருக்கிறுன், ஸ்ரீ பார்த்தஸாரதி. இதனுலும், "இரண்டு தூண்களுக்குள்ள வேற்றுமை போன்ற வேற்றுமை பரமனுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் ஜீவாத்மாக்களுக்குள் ஒருவனைக் குறித்து மற்றெருவனுக்கும் உண்டு" என்பது ஸ்பஷ்டமாம்.

4. இனி, மேற்கூறிய உண்மையை கீதைக்கும் மூலமாகிய சுருதியிலும் நாம் நன்கு உணரலாகும். "**நித்யோ நித்யாநாம் சேதநச் சேதநா நாம் ஏகோ பஹூநாம் யொ விததாதி காமாந்தம் ஆத்மஸ்த்தம் யேந பச்யந்தி தீரா: தேஷாம் சாந்தி: சாச்வதி நேதரேஷாம்||**" இந்தச் சுருதி, கடோபநிஷத்தின் இரண்டாம் அத்தியாயம் ஐந்தாம் வல்லியில் உள்ளதாம். இதின் கருத்து - "நித்தியரும் பலரும் அறிவுள்ளவருமான ஜீவாத்மாக்களுக்கு நித்தியனும் ஒருவனும் அறிவுள்ளவனுமான பரமன் விரும்பப்படுகின்றவையை அளிக்கிறுன். புத்திமான்களுள் சிறந்தவரா எவர் தம்மிடம் எழுந்தருளியிருக்கும் பரமனைக் கண்கூ

டாகக் காண்கின்றனரோ, அவருக்கு நித்தியமான சாந்தி உண்டாம்; ஏனை யோருக்கு இன்று'' என்பதாம். இங்கு, வேறொரு சுருதியையும் அவசியம் காணுதல் நன்றாம்.

''யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம் கர்த்தாரம் ஈசம் புருஷம் ப்ரஹ்ம யோநிம் | ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜன: பரமம் ஸாம்யம் உபைதி ||'' (இது முண்டகோப நிஷத்து 3-1-3)

''எக்காலத்தில் பரமனைப் பஜனம் செய்பவன் (பார்ப்பனன்) விளங்குகின்ற திருமேனி உடையவனும், இவ் உலகைப் படைப்பவனும், தூண்டி நடத்துபவனும் எல்லாப் பயனை அளிப்பவனும், (குடத்திற்கு மண்போன்று) பிரகிருதிக்குக் காரணனுமான பரமனைப் பார்க்கின்றனனோ, அக்காலத்தில், அந்தப் பஜனம் செய்பவன் புண்ணிய பாவங்களாகிய கருமங்களை விட்டிட்டு, உடலோடு தொடர்பு சிறிதும் இன்றி, பரமனோடு பரமஸாம்யத்தைப் பெறுகின்றான்'' என்பது, மேற்கூறிய சுருதியின் கருத்தாகும்.

மேற்கூறிய இரு சுருதிகளையும் (இச் சுருதிகளின் கருத்துக்களுடன்) நோக்குவார்க்கு, ''பரமன் நித்தியன்; ஜீவாத்மாக்களும் நித்தியர்கள்; பரமன் பேரறிவாளன்; ஜீவாத்மாக்களும் அறிவுள்ளவர்கள்; பரமன் ஒருவன்; ஜீவாத்மாக்கள் பலர்; பரமன் பயன்களை ஜீவாத்மாக்களுக்கு அளிப்பவன்; பரமனால் அளிக்கப் பெறும் பயன்களைப் பெற்று அனுபவிப்பவர்கள் ஜீவாத்மாக்கள்; (ஜீவன், உடலுக்கு ஆத்மாவாக இருப்பதுபோன்று) ஜீவனுக்கு பரமன் ஆத்மாவாக இருப்பவன்; (உடல் உயிருக்குச் சரீரமாக இருப்பது போன்று ஜீவனும் பரமனுக்குச் சரீரமாக இருப்பவன்; பரமனைத் தம் உள்ளத்தில் கொண்டு, இடைவிடாது தியானம் செய்து, அத்தியானம் முற்றும் போது, அப்பரமனைக் கண்கூடாக் காணும் சிறந்த புத்திமான்களுக்கு அப்பரமனருளால் நித்தியமான சாந்தி உண்டாம்; பரமன் நன்கு விளங்குகின்ற திருமேனி உடையவன்; உலகத்தை ஆக்கித் தூண்டி நடத்துபவன்; எல்லாப் பயன்களையும் அளிப்பவன்; காரணனயிருப்பவன்; அவனைக் காண்பவனுக்கு கருமங்களற்று, உடலோடு உண்டான தொடர்பும் போய் பரமனுக்குள்ள சிறப்புக்கள் போன்ற சிறப்புக்கள் உண்டாம்; இதனால், பரமனுக்கும் ஜீவனுக்கும் ஜீவனுக்குள் ஒருவனுக்கு மற்றொருவனோடும் உண்மையில் வேற்றுமை உண்டு'' என்பன நன்கு விளங்குகின்றன அல்லவா?

இவ்வாறு, **''நத்வே வாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா: | நசைவ நபவிஷ்யாம: ஸர்வே வயம் அத: பரம் ||''** என்னும் சுலோகத்தில் அவசியம் அறியவேண்டிய வேறொரு ஸாரப் பொருளையும் அறிந்தோமல்லவா?

இனி, ஜீவன் நித்தியன் (என்றும் உள்ளவன்) என்னும் உண்மையை ஸ்ரீ பார்த்தஸாரதி எங்ஙனம் நம் உள்ளங்களில் ஊன்றியிருக்குமாறு உபதேசம் செய்திருக்கிறான்? என்னும் வினு? யாருக்கும் இங்கு எழ இடமுண்டாதலின், அவ்வினுவிற்கு, இரண்டாமத்யாயத்தில் அப்பரமன் அருளிச் செய்த சுலோகங்களைக் கொண்டே விடை பகருவோம்.

(தொடரும்)

தொண்டை நாட்டுத்

திருப்பதியநுபவம்

மகாவித்துவான் P.B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இனி பதின்மூன்றுமத்யாயத்திற்குச் செல்வோம், இதில் முதல் ச்லோகமும்-இரண்டாம் ச்லோகமும் சிறிது விபரீத வுணர்ச்சியை உண்டாக்குவது போலுள்ளது. இங்கு ஸ்வாமியினுடைய பாஷ்யமும் அதற்கு டீகையான தாத்பர்ய சந்த்ரிகையும் மிக மிக விரிவாக அமைந்திருக்கின்றது. மூல ச்லோகங்களாவன :—" இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே, ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:" என்பது முதல் ச்லோகம். இனி இரண்டாவது ச்லோகமாவது—" க்ஷேத்ரஜ்ஞம் சாபிமாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத! க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞயோர் ஜ்ஞாநம் யத்தத் ஜ்ஞாநம் மதம் மம," என்பது. இங்கு (ஆபாத ப்ரதீதியில்) மேல் நோக்கில் என்ன தோற்றுகிறதென்ருல், க்ஷேத்ரமென்னப் படுகிற அசேதநமும் க்ஷேத்ரஜ்ஞனென்னப் படுகிற சேதநனும் ஆகிய இரண்டையும் அர்ஜுநா! நானுக அறிந்துகொள் என்னப்படுகிறது பூர்வார்த்தத்தில்;

க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞர்களாகிற சேதநாசேதநங்களை யறிந்து கொள்வதென்பது யாதொன்றுண்டோ, அது தான் என்னையறிந்து கொள்வதாகும் என்கிறது உத்தரார்த்தத்தில். இவற்ருல் அத்வைத வாதம் ஸித்திக்கிறதென்று கருதிய சங்கராசாரியார் தமது பாஷ்யத்தில் அக்கருத்தை விளக்கியிருக்கின்ருர். அதற்கு விரிவான மறுப்பு ஸ்வாமியின் கீதா பாஷ்யத்திலுள்ளது; மிக மிக விரிவான மறுப்பு தாத்பர்ய சந்த்ரிகையிலுள்ளது. அதன் ஸாரத்தை மிகவும் சுருக்கமாகத் தெரிவிக்கிருேமிங்கு, தேஹத்திற்காட்டிலும் ஆத்மா வேறுபட்டவன் என்பது தெரிந்திருக்கச் செய்தேயும் 'தேவோஹம் மநுஷ்யோஹம்' என்று வ்யவஹாரம் செய்துவருகிருேம். அஹம் என்பதற்கு ஆத்மா அர்த்தமே யொழிய தேஹம் அர்த்தமன்று; தேவத்வமோ மநுஷ்யத்வமோ சரீரத்திலுள்ளதேயன்றி அஹமர்த்தமான ஆத்மாவிலுள்ளதன்று. அப்படியிருந்தும் 'தேவ: அஹம், மநுஷ்ய: அஹம்' என்று ஸமாநாதி கரணமாக ப்ரயோகிப்பது எப்படி பொருந்துகிறதென்ருல் கேண்மின். ஆத்மாவும் சரீரமும் ஒன்றைவிட்டொன்று தனித்து நிற்பனவல்ல. தேஹமானது ஆத்மாவுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணமாய்க் கொண்டேயிருப்பதால் இந்தச் சேர்த்தி

யையிட்டு 'தேவ: 'அஹம், மநுஷ்ய: அஹம்' என்று வ்யவஹரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அர்த்தம் என்ன வென்றால், தேவ சரீரக: அஹம், மநுஷ்ய சரீரக: அஹம்—என்பதேயாம். ஏவஞ்ச, சரீராத்ம பாவரூபமான ஸம்பந்தத்தைக் கொண்டு பொருத்தப்பட்டதாயிற்று. இவ்வண்ணமாகவே க்ஷேத்ரஜ்ஞஞ் சாபி மாம் வித்தி'' என்றதும் சரீராத்ம பாவ ஸம்பந்த நிபந்தனமாகவே பொருந்தக் குறையில்லை. அசேதநமான தேஹமானது ஜிவாத்மாவுக்கு சரீரமாயிருப்பது போல, இவ்விரண்டும் சேர்ந்து பரமாத்மாவுக்கு சரீரமாயிருக்கும் விஷயம் ஸுபாலோபநிஷத்து முதலானவற்றில் ஸுப்ரசித்தமாயிருப்பதால் க்ஷேத்ரத்தையும், க்ஷேத்ரஜ்ஞனையும் பரமாத்வாக நினைப்பதென்பது—''க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனையும் சரீரமாகக் கொண்டவன் பரமாத்மா'' என்று நினைப்பதாகவே முடிந்து நிற்கும். இவ்விஷயம் பல பல உப பத்திகளுடன் ஸ்வாமி பாஷ்யத்தில் விரித்துரைக்கப்பட்டிருப்பது காண்க.

பதினான்காமத்தியாயத்தில் (24,25ல்) ''குணாதீதஸ் ஸ உச்யதே'' என்று ஓர் உத்தமாதிகாரி சொல்லப்படுகிறான். இவனுக்கு குணாதீதனென்று பெயர். குணங்களைக் கடந்தவனென்று பொருள். ஸகல குணங்களுக்கும் கொள்கலமாக இருப்பவனன்றோ உத்தமாதிகாரி; குணங்களைக் கடந்தவன் எப்படி உத்தமாதிகாரி யாவன்? என்று கேள்வி பிறக்கக்கூடும். இங்கு விவக்ஷிக்கப்படுகிற குணங்கள் சமதமாதி குணங்களல்ல; ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள். ''முக்குணத்து வாணியத்து இரண்டிலொன்று நீசர்கள்'' என்று திருமழிசைப் பிரானும், ''முக்குணத்திரண்டவை யகற்றி, ஒன்றி னிலொன்றி நின்று'' என்று திருமங்கையாழ்வாரும் அருளிச் செய்கிறபடி ரஜஸ் தமோ குணங்களிரண்டுந்தானே ஹேயங்கள்; ஸத்வ குணம் உபாதேயந்தானே; அதுவுங்கூட ஹேயமென்று தோன்றும் படியுள்ளதே யென்று நினைக்க வேண்டா; சுத்த ஸத்வம் என்பது உபாதேயமே. ரஜஸ்தமஸ்ஸுக்களோடு கலசின ஸத்வம் உபாதேயமன்று, அது ஹேயமே. ஆக, தமோகுணமும் ரஜோ குணமும் ரஜஸ்தமோ மிச்ர ஸத்வ குணமுமாகிய முக் குணங்களையுங் கடந்தவன் குணாதீதனெனப் படுவான். இவனை நாம் எப்படித் தெரிந்துகொள்வதென்றால் அவனுடைய நிலைமையைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம், அந்த நிலைமை தெரிவிக்கப் படுகிறது இரண்டு ச்லோகங்களினால். ''ஸம துக்க ஸுகஸ் ஸ்வஸ்த: ஸமலோஷ்டாச்ம காஞ்சந: துல்ய ப்ரியா ப்ரியோ தீரஸ் துல்ய நிந்தாத்ம ஸம்ஸ்துதி: ; மாநாவ மாநயோஸ் துல்யஸ் துல்யோ மித்ராரி பக்ஷயோ, ஸர்வாரம்ப பரித்யாகீ குணாதீதஸ் ஸ உச்யதே'' என்னு மிவ்விரண்டு ச்லோகங்களும் அநவரதம் கண்டபாடம் செய்யத் தக்கன. ஸுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் ஒரே விதமான சித்தவ்ருத்தியை யுடையவனா யிருக்க வேணுமென்கிறது. 'ஸம துக்க ஸுக:' என்பதனால். அதன்மேல் [ஸ்வஸ்த:] என்கிறது. இதற்கு இவ்விடத்தில் அபூர்வமான வ்யுத்பத்தியைக் காட்டி யருளுகிறார் ஸ்வாமி யெம்பெரு

மானுர். 'ஸ்வஸ்மிந் ஸ்தித :—ஸ்வஸ்த :' (தன்னிடத்திலேயே யிருப்பவன்) என்கிருர். உடனே அதை விவரிக்கிருர். உலகில் ஸுகதுக்கம், ப்ரியாப்ரியம் என்னும் சப்தங்கள் விசேஷமான பொருள் வாசியை யுடையனவல்ல; பர்யாய சப்தங்கள் போலவே காணும். ஆனுலும் விஷய பேதத்தாலே பொருள் பேதித்திருக்கும். ஸ்வஸ்த: என்பதற்கு "ஸ்வாத்மநிஸ்தித: - ப்ரஸந்ந:" என்பது சங்கர பாஷ்யம். அதையே நன்கு விவரித்துக்காட்டுகிறது ராமாநுஜ பாஷ்யம். இதற்குமேல் "ஸமலோஷ்டாச்ம காஞ்சன:" என்கிறது. லோஷ்டத்தையும் கல்லையும் பொன்னையும் துல்யமாக நினைப்பவன். இப்படியாக மேன்மேலும் சொல்லப் படுகிற தன்மைகள் இந் நிலத்தில் நம் போன்ற பாமரர்களுக்கு எவ்வளவு பழக்கம் செய்தாலும் வாய்க்கக் கூடியவை யல்ல. இத்தகைய நலம் வாய்ந்தவர்கள் பூலோகம் முழுவதற்குள்ளும் ஒருவரிருவர் தேறுவதும் அருமையென்னலாம். ஆயினும் இப்படிப்பட்ட ச்லோகங்களை நாம் மனனம் செய்து கொண்டே யிருந்தால் பெரிதும் பயன் படும் என்றிவ்வளவே சொல்லலாம்.

இனி பதினைந்தாமத்தியாயத்திற் புகுவோம். இதில் விமர்ச தோரணையில் தெரிவிக்கும் ஸாரமான விஷயமொன்றைக் குறிக் கொண்மின். நமது ஸ்ரீ ப்ாஷ்யகாரர் பெரும்பாலும் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளைத் தழுவியே ஸ்ரீ பாஷ்யம் கீதா பாஷ்யம் முதலியவற்றை அருளிச் செய்ததாக நம் முன்னேர்கள் திருவுள்ளம் பற்றி யிருக்கிருர்கள். பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ர வாக்யங்களொருங்க விடுவர்' என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் ஸ்பஷ்டமாகவும் பணிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்ருக நாம் பல இடங்கள் காட்டி யிருக்கிறேம், இப்போது இவ்வத்யாயத்தில் ஒரு நுட்பம் காட்டுகிறேம். இங்கு (15-18) "யஸ்மாத் க்ஷரமதீதோஹம்" என்கிற ச்லோகத்தில் "அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:" என்றுள்ளது. இங்கு "லோகே வேதே ச" என்றதற்கு லோகத்திலும் சாஸ்திரத்திலும் என்று பொருள் சாதாரணமாக எல்லார்க்கும் தோன்றக் கூடியது. இதர பாஷ்யகாரர்கள் இப்படித்தான் அர்த்தம் செய்திருக்க காண்கிறே மிங்கு. ஸ்வாமி யெம்பெருமானுரோ வென்னில், தமது பாஷ்யத்தில் அங்ஙனம் பொருள் பணிக்கவில்லை "வேதார்த்தாவலோகநாத் லோக இதி ஸ்ம்ருதி ரிஹோச்யதே; ச்ருதௌ ஸ்ம்ருதௌ ச இத்யர்த்த:" என்பது கீதா பாஷ்ய ஸ்ரீ ஸூக்தி. லோகம் என்பதற்கு கரணே வ்யுத்பத்தியினுல் சாஸ்த்ரமென்றே பொருள் கொள்ளப் பட்டிருக்கிறது. இப்படித்தான் கொள்ள வேணுமென்று, தாத்பர்ய சந்த்ரிகையில் வேதாந்த தேசிகனும் உபபாதநம் செய்தருளியிருக்கிருர். லோக மென்னும் சொல்லுக்கு இப்படி சாஸ்த்ர மென்கிற பொருளைக் கொண்டவர்கள் வேறு யாருமில்லை. லோக சப்தத்திற்கு சாஸ்த்ர மென்று அர்த்தமுள்ளதாக கோசங்களிலும் காணப்படவில்லை. "லோகஸ்து புவநே ஜநே" என்றுதான் அமர கோசத்திலுள்ளது. இதர கோசங்களிலும் இங்ஙனமே காண்கிறது. இப்படி யிருக்க நம் ஸ்வாமி பாஷ்யகாரர் லோக பதத்தை சாஸ்த்ர ப்ரயாயமாகக்

கொண்டு பொருளருளி செய்ததற்கு நிதானமென்ன? என்று பராமர்சிக்க வேணும். நம்மாழ்வாருடைய வொரு ஸ்ரீ ஸூக்தியே இதற்கு மூல காரண மென்கிற தத்துவத்தை இங்கு நாம் நிரூபிக்க விரும்புகிறோம்.

நம்மாழ்வார் திருவாய் மொழியில் "ஒன்றுந்தேவு முலகு முயிருமென்று தொடங்கும் பதிகத்தில் (4-10-6) போற்றி மற்றோர் தெய்வமென்னும் பாசுரத்தில்" "எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லையென்றே" என்றருளிச் செய்துள்ளார். இப் பதிகத்தில் ஸ்ரீமந் நாராயணனுடைய பரத்துவத்தை உபபாதித்து வந்த ஆழ்வாரை நோக்கி 'ஸ்ரீமந் நாராயணனே ஸர்வேச்வரனுகில் அவன் தன்னையே ஆச்ரயிக்கும்படி எங்களைப் பண்ணுமல் இதர தெய்வங்களைத் தொழுமாறு எங்களைச் செய்து வைத்தது ஏன்? என்று சிலர் கேட்பதாகக் கொண்டு அவர்களுக்கு விடை கூறுவதாக இப் பாசுரமமைக்கப் பட்டுள்ளது. இப்பாசுரத்தில் " எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லையென்றே" என்பதுதான் உயிராக வுள்ளது. எல்லாரும் ஸ்ரீமந் நாராயணனையே தொழப் பெற்றால் எல்லாருமே வீடு பெறுவார்கள்; அப்படி எல்லாரும் வீடு பெற்றுவிட்டால் உலகு இல்லையாய் விடும்; (அதாவது லீலா விபூதி அடியற்றுப்போய் விடும்;) அங்ஙனம் ஆகாமைக்காகவே எம்பெருமான் உங்களை இதர தேவதாபஜனம் பண்ணி ஸம்ஸாரிகளாய்த் தொலைந்து போம்படி செய்து வைத்தான் - என்பதாக இப்பாசுரத்திற்கு ஆபாத ப்ரீதியில் பொருள் தோன்றக் கூடும். தசோபநிஷத் பாஷ்யகாரரான ரங்க ராமாநுஜஸ்வாமி வடமொழியில் (திருவாய் மொழிக்குத்) தாம் பணித்த ஒன்பதினுயிரப்படி வியாக்கியானத்தில் இவ்விதமான பொருளையே எழுதியுள்ளார். ஆனுல், திருக்குருகைப் பிரான் பிள்ளான், நம்பிள்ளை முதலான பூருவாசாரியர்கள் தம் வியாக்கியானங்களில் வெளியிட்டருளின பொருள் இங்ஙனேயல்ல, எங்ஙனேயென்னில்; 'உலகில்லையென்றே' என்ற விடத்தில், உலகு என்பதற்கு சாஸ்த்ரமென்று பொருள்; ப்ரபல பாபம் செய்து வைத்த நீங்களும் ப்ரபல ஸுக்ருதிகளுக்கே பெறக் கூடியதான மோக்ஷத்தைப் பெற்று விட்டீர்களாகில் சாஸ்த்ர மர்யாதையே அழிந்து விடுமென்று நினைத்தே எம்பெருமான் உங்களை தேவதாந்தர ப்ரவணர்களாக ஆக்கிவைத்திருக்கின்றான்; அவரவர்கள் பண்ணின புண்ய பாபரூப கருமங்களுக்குத் தக்கபடியே பலன் கொடுப்பதென்று ஒரு சாஸ்த்ர மர்யாதை ஏற்பட்டிருக்கிறது; நீங்கள் முற் பிறவிகளில் பிரபலமான தீவினைகளைச் செய்திருக்கிறபடியால் அவற்றின் பலனுக இப்பிறப்பில் க்ஷுத்ர தேவதா பஜநம் பண்ணும் படியாக உங்களை உபேக்ஷித்திடலாயிற்று. கொடிய பாவங்கள் செய்த உங்களையும், புண்யாத்மாக்களைப் போல ஸ்ரீமந் நாராயண ஸமாச்ரயணமே செய்யும்படி பண்ணிவிடுவரானல் அப்போது முன் சொன்ன சாஸ்த்ர மரியாதை அழிந்து விடுமன்றோ; அங்ஙனம் அழியாமைக் காகவே உங்களை இங்ஙனே நிறுத்தி வைத்தது - என்பதாகவே ஆழ்வார் திருவுள்ளம் பற்றிய பொருள் என்று பூருவாசாரியர்கள் உபபாதித்தருளுகிறார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன். B.A., B.L., திருநெல்வேலி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

த்வய பரமாக ஸ்ரீ ராமாயணத்துக்கு நிர்வாகம் கேட்ட உடையவர் பெருமகிழ் வெய்தினர். பின்னர் பெரிய திருமலை நம்பிகளைத் தண்டனிட்டு "ஸ்வாமீ! அடியேன் பாக்யம்! அபூர்வ அர்த்த விசேஷங்கள் ப்ரஸாதிக்கப் பெற்றேன். அழகிய மணவாளனை ஸேவிக்க வேண்டுமென்ற அவா என்னை ஆட்கொண்டது. தேவரீர் நியமனத்தை எதிர்பார்த்து நிற்கிறேன்" என்று பிரார்த்தித்தார். நம்பிகளும் உள்ளம் மிக உவந்து "எம்பெருமானரே! பரமார்த்தத்தை ஒரு நல்ல பாத்திரத்திட்டோம் என்று நாமும் மகிழ்கிறோம் காணும். பேறு உம்முடையது மட்டுமல்ல.... சரி! உம்முடைய ஆசையின் குறுக்கே நிற்பது இனிக்கூடாது. சென்று திருவரங்கனைப் "புணர்த்தகையினராய் அடியேனுக்கும் போற்றுமின்". நீர் இங்கே இவ்வளவு காலம் தங்கித் திரும்புகிறீர். உமக்கு நாம் ஒன்றும் தரப்பெற்றோமில்லையே என்ற ஒரு குறைதான் என் உள்ளத்தைச் சற்று வருத்துகிறது" என்று அருளிச்செய்தார். இதைக் கேட்ட உடையவர் "ஸ்வாமீ! அடியேன் உள்ளத்திலே நெடுநாள் கிடக்கையான நினைவொன்றிருந்தது. அது நிறைவேறும் காலம் கிட்டிவிட்டது போலும். அதனால்தான் தேவரீர் திருவுள்ளத்திலே இப்படி ஒரு குறை' தோன்றியிருக்க வேண்டும்" என்று விண்ணப்பித்தார். நம்பிகளும் 'அதுவென்?' என்று கேட்க உடையவர் ஸ்வாமீ! தேவரீருடன் இருக்கும் கோவிந்தப் பெருமாளும் அடியேனும் இரு சகோதரிகளின் மக்கள். இருவரும் ஒன்றாகவே முன்னாள் யாதவ ப்ராகசரிடம் கல்வி பயின்றோம். பெருமாள் திருவருளால் அடியேன் பிரிந்து வந்தேன். அவனோ காலகதியால் தேவதாந்தர பஜனத்தில் சிக்கிக்கொண்டான் 'அவனை' உடன் கூடுவது என்றுகொலோ?" என்று ஒரு எண்ணம் அடியேன் மனத்தை விட்டகன்றியது. அவனைத் தேவரீர் மூலம் பெருமாளும் "சார்ந்த இருவல்வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்துத் தீர்ந்து தன்பால் மனம் வைக்கத் திருத்திப்" பணிகொண்டார். அவரை இங்கே நேரிலே பார்த்தேன். அவரது ஆத்மகுணங்களும் ஆசார்யாபிமானமும் அவர்பால் அடியேனுக்கிருந்த ஆசையைப் பன்மடங்காக்கிவிட்டன. தேவரீருக்குப் பணிவிடை புரிந்து கொண்டிருக்கும் அவரை அடியேனுடன் அனுப்பவேணும் என்று அடியேன் எப்படிப் பிரார்த்திப்பது என்று தயங்கிக்கொண்டிருந்தேன். அடி

யேன் உள்ளத்தின் ஓட்டம் அறிந்தவர் போன்று தேவரீர் உள்ளத்தும் ஒரு குறை தட்டியிருக்கிறது, இரண்டும் நிறைவேறுமாறு ஸ்ரீ கோவிந்தரை அடியேனுக்குத் தந்தருளலாகாதோ! ''என்று பிரார்த்தித்தார். நம்பிகளும் '' எம்பெருமானுரே! உமது ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும்!'' என்று அகமுவந்தருளி, கோவிந்தரை அழைத்து அவரை நோக்கி '' வாரும் கோவிந்தரே! நீர் இன்றுதொட்டு இந்த எம்பெருமானுரை நம்மைக் கண்டாற்போலே சேவித்திரும்'' என்று கூறி அவரை உதகபூர்வமாக எம்பெருமானுர் கையிலே தத்தம் செய்து கொடுத்தார். எம்பெருமானுரும் உவந்த உள்ளத்தராய் கோவிந்தரைப் பெருமாள் பரதாழ்வாரைத் தழுவியது போன்று இருகையாலும் உடல் குளிரக் கட்டியணைத்து உவகைக் கண்ணீராய் நம்பிகளுக்கு தெண்டன் சமர்ப்பித்து அவரிடம் நியமனம் பெற்றுக் கோவிந்தருடன் திருவரங்கம் நோக்கிப் புறப்பட்டார்.

வழியிலே ''வண்டு வளங்கிளரும் சோலை வண்பூங் கடிகை'' க்குச்சென்று கடிகாசலம் ஏறி அங்கே கோயில் கொண்டுள்ள ''மிக்கார் வேத விமலர் விழுங்கும்'' அக்காரக்கனியைக் கண்குளிரக் கண்டு அடிபணிந்தார். அங்கிருந்து திருப்புட்குழிசென்று '' க்ருத்ர புஷ்கரிணி (கழுகுத்தீர்த்தம்)யிலே தீர்த்தஸ்விகாரம் செய்து அங்கெழுந்தருளியுள்ள பெரிய உடையாரை (ஜடாயுவை)த் திருவடி தொழுது சண்டப்ரசண்டர்களைச் சரணடைந்து உள்ளேபுக்கு மரகதவல்லித் தாயாரையும் திருவனந்தாழ்வானையும் வணங்கி வலமாக வந்து உள்புக்குச் சேனைமுதலிகளை அடிதொழுது ''பொன்முடி எம்போரேற்றை எம்மானை நால் தடந்தோள் தன்முடி வொன்றில்லாத தண்டுழாய் மாலையனை'' என்றபடி பொன்மயமான நீண்டதிரு வபிஷேகத்தோடும், சிறந்த துளசி மாலையோடும் சேவை சாதித்து நின்ற விஜயராகவனை '' சங்கசக்ராதி பஞ்சாயுத மேந்தியே! தாமோதரப் பெயரனே! இந்திரியங்களுக்கு நியராமகனே! வேத சொரூபியே! எல்லாத் தேவ மனுஷ்யர்களாலும் சேவிக்கப்படுபவனே! அரக்க குலநாச கண்டீரவமே! ஜகத் காரணனே! கோலவில் அங்கையிற்கொண்ட கொற்றவனே!'' என்று பல்வகையாக உளமுருகப் பரவிப் போற்றி நின்றார். பெருமாளும் திருவுளமுவந்து அவருக்குத் தீர்த்தப்ரஸாதம் அருள உடையவரும் பணிந்து பெற்று அங்கு நின்று போந்து திருவெஃகா முதலிய திவ்யதேசங்களை ஸேவித்துத் திருக்கச்சி நம்பி ஸந்நிதிக்கெழுந்தருளினுர்.

எம்பெருமானுருடன் போந்த கோவிந்தருக்கோ உள்ளம் ஒரு நிலையில்லாது தத்தளித்துக் கொண்டே வந்தது. ''அவனை விட்டகன்று உயிராற்றகில்லாது'' என்றபடி பெரிய திருமலை நம்பிகளைப் பிரிந்து தரிக்கமாட்டாத அவர் திருமேனி அவ்வேக்கமே காரணமாக வாடி மெலிந்து முகமும் களையிழந்து போயிற்று. அவரும் ஒருவருடனும் அளவளாமல் தன் உளத்துன்பையும் வெளியிடக் கூசியிருந்தார். இவர் வாட்டத்தை உடையவர் கண்ணுற்று

அவருற்ற நோய் தெரிந்து கோவிந்தரை நோக்கி "கோவிந்தரே! நாம் இவ்விடத்திலேயே சிறிது காலம் தங்கியிருப்போம். நீர் அதற்குள் திருமலை சென்று நம்பிகளை ஸேவித்து மீண்டு வாரும்" என்றருளிச் செய்தார். கோவிந்தரும் சற்றே தெளிவுற்றுத் திருமலைக்குப் பயணமாக உடையவர் அவருடன் இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களைத் துணையாக அனுப்பிவைத்தார்.

திருமலை சென்ற கோவிந்தர் நேரே பெரிய திருமலை நம்பிகளின் தலைவாசலிலே சென்று தண்டனிட்டு நம்பிகளின் உத்தரவை எதிர்நோக்கி நின்று கொண்டிருந்தார். அதனை அங்குள்ளார் கண்டு உள்ளே சென்று நம்பிகளுக்கறிவிக்க நம்பிகள் திருவுள்ளம் கலக்கமுற்று அவர்களை நோக்கி "அந்தப் பித்தனைப் போகச் சொல்லுங்கள்" என்று பரபரப்புடன் கூறினர். அப்போது அவரது தேவிகள் மனமிரங்கி "ஸ்வாமி! இவ்வளவு தூரம் நடந்து இளைத்து வந்திருப்பவரைக் கொஞ்சமாவது ஆதரித்து சேவை ஸாதித்துத் தீர்த்தப்ரஸாதம் ப்ரஸாதிக்க வேண்டாவோ?" என்று பணிவோடு வேண்டினர். நம்பிகள் அவளை நோக்கி "பெண்ணே! விற்ற பசுவுக்குப் புல்லிடுவார் ஆரேனுமுண்டா?" என்று கூறி கோவிந்தருக்கு சேவை சாதியாமலே இருந்து விட்டார். கோவிந்தரும் நம்பிகள் சேவைக்குக் காத்திருந்து களைத்து பின்னர்தன் ஆசையைவிட்டு தலைவாசலிலிருந்தபடியே நம்பிகள் இருந்த திசை நோக்கித் தெண்டனிட்டு தன்னுடன் வந்த இரு ஸ்ரீ வைஷ்ணவர்களுடனே மீண்டு வந்து எம்பெருமானாரை சேவித்து நின்றார். உடையவரும் அப்போதும் ஒன்றும் கேளாதே கோவிந்தரை மலர்ந்த திருமுகத்தோடு கடாக்ஷித்தனுப்பிவிட்டுப் பின்னர் கூடச் சென்ற ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் கோவிந்தர் சென்ற காலை நிகழ்ந்தவற்றையெல்லாம் அறிந்து பெரிய திருமலை நம்பிகளின் யாவும் அறி தன்மையையுணர்ந்து போற்றினர். அப்பால் கோவிந்தரைத் தம்மருகே வைத்துக்கொண்டு தம்முடை எளிமை சீலம் முதலிய கல்யாண குணங்களாலே அவரை ஆதரித்து உகப்பித்து அவர் மனத்துள்ள கலக்கம் மாறச் செய்து தம் குணங்களிலே அவர் மனம் தானாகவே ஈடுபடும்படி செய்தார். பிறகு உடையவர் திருக்கச்சி நம்பிகளுடன் பேரருளாளன் ஸந்நிதி சென்று தண்டன்சமர்ப்பித்து நிற்க, அருளாளனும் தன் திருப்பவளச் சோதிச் செவ்வாய் திறந்து "எம்பெருமானாரே! நம் வடக்கு மலைக்குப் போய் வந்தீரோ!" என்று பரிவுடன் முகமன் வினவித் தீர்த்த ப்ரஸாதங்களும் ஸ்ரீ சடகோபனும் ப்ரஸாதித்தருள உடையவரும் அவற்றைப் பெற்றுப் பேரருளாளனிடம் விடைகொண்டு தம் முதலிகளோடும் கோவிந்தரோடும் திருவரங்கப் பெருநகருக்குப் புறப்பட்டார்

வழியிலே மதுராந்தகத்தே சென்று ஏரிகாத்த பெருமாளை சேவித்துத் திருமகிழத்தருவடிக்குச்சென்று தமக்குப் பெரிய நம்பிகள் அருள் சுரந்து மந்திரோபதேசம் செய்தவிடம் என்று அந்தத் தலத்தை வணங்கி எழுந்தருளினர்.

(தொடரும்)

16-6-64 அன்று மாகறல் ஸ்ரீ வீற்றிருந்த பெருமாள் கோயில் இராச கோபுரத் திருப்பணிக்குத் தமிழக முதலமைச்சர் திரு M. பக்தவத்சலம் B. A , B. L., அவர்கள் அடிக்கல் நாட்டிச் சொற்பொழிவு நிகழ்த்துதல்.

பொருள் அடக்கம்

1. விநாயகர் மாட்சி
2. கோயில் சிற்பங்களில் சில அபூர்வ விலங்குகள்
3. மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை
4. திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ்
5. தேசிகாபுரத்துக் கல்வெட்டுக்கள்
6. கீதாஸாரம்
7. தொண்டை நாட்டுத் திருப்பதி யநுபவம்
8. ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

— ஆசிரியர்.



பூம்புகாரக் கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரித் திறப்பு விழாவிற் கலந்து கொண்டு
சிறப்பித்த பெருமக்கள் (21 - 9 - 64)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34. Printed at Manorama Press, 39, M. J. B. St., Madras-5.